பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 01 புதன்கிழமை (15.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily ஒளி :201

## அரசு - புலிகள் இணைந்து உடனடியாக பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும்

### உதவும் நாடுகளின் இணைத் தலைமை வலியுறுத்து

வாஷிங்ரன்,ஜூன் 15

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பொதுக்கட்டமைப் பொன்றினை உடனடியாக உருவாக்கவேண்டுமென்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அமைப்பின் இணைத் தலைமைகளான ஜப்பான, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, அமெரிக்கா ஆகியவற்றின் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வாஷிங்ரனில் இடம்பெற்றது. அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுக் கட்டமைப்பு முயற்சியை வரவேற்று விசேட அறிக்கையொன்றை மேற்படி இணைத் தலைமைகள் விடுத்தன. அந்த அறிக்கையில் மேலும

(16ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவில் லொறி தடம்புரண்டு ஒருவர் பலி; இருவர் காயம்!

விசுவமடு,ஜூன்15

விசுவமடு தேராவில் குளத்தடியில் லொறி ஒன்று நேற்றுத் தடம்புரண்டதில் அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார்; இருவர் காயமடைந்தனர்.

விசுவமடுவிலிருந்து உடையார் கட்டை நோக்கி இந்த லொறி சென்றுகொண்டிருந்ததாகவும் -

தேராவில் குளத்தடித் திருப்பத்தில் திரும்பியபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சர் இன்று வருகை

கொழும்பு,ஜூன்15

பிரிட்டனின் அபிவிருத்தி அமைச்சர் கிரேத தோமஸ் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார். நாளை வரை அவர் இங்கு தங்கியிருக்கிறார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை

(16ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரக் கட்டணம் 8 சதவீதத்தால் அதிகரிக்கும்

மின்சாரக் கட்டணம் எட்டு வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது என இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் ரன்ஜித் பொன்சேகா தெரிவித்தார்.

இக்கட்டண உயர்வுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. விரைவில் இது நடைமுறைக்கு வரும் என அவர் குறிப்பிட்டார்.

எரிபொருளகளின் விலை அதிகரித்துள்ளது. மின்சார உற்பத்தி இயந்திரங்களும் எரிபொருளிலேயே இயங்குகின்றன. எனவேதான் மின்சாரக்கட்டணத்தை எட்டு வீதத்தால் அதிகரிக்க சபை முடிவெடுத்துள்ளது எனவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரன்ஜித் பொன்சேகா குறிப்பிட்டார். (ஐ)

## கொள்ளைக் கும்பல் பொலீஸில் சிக்கியது

கொழும்பு, ஜூன்15

பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நீண்டகாலமாகத் தேடப்பட்டுவந்த கொள்ளைக் கும்பல் ஒன்றைப் பொலீஸார் நேற்று வெள்ளவத்தையில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

கடத்தப்பட்டதாகக் கருதப்படும் வான் ஒன்றில் சென்றுகொண்டிருந்த சமயம் இந்தக் கும்பல்

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பிக்குள் குழப்பம்!

## அவசரப்பட்டு முடிவு எடுத்துவிட்டதாக தலைமையின் மீது கீழ்மட்டம் விசனம்

கொழும்பு,ஜூன்15

**பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை அடிப்படையாக வைத்து அரசிலிருந்து விலக ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு விடுத்த காலக்கெடு, அந்தக் கட்சிக்குள் குழப்பமான - மௌனப் புரட்சியொன்றை - ஏற்படுத்திவிட்டிருப்பதாக ஜே.வி.பியின் உள்ளக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.**

பொதுக்கட்டமைப்பு யோசனையைக் கைவிட்டுவிட்டார் என ஜனாதிபதி சந்திரிகா இன்று நள்ளிரவுக்கு முன் அறிவிக்கவேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் நாளை காலை அரசை விட்டு ஜே.வி.பி. வெளியேறிவிடும் என்று அதன் தலைமை ஏற்கனவே காலக்கெடு விதித்து அறிவித்திருப்பது தெரிந்ததே.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுத் தரப்பிலிருந்து இறுதிநேரக் கெஞ்சல்

கொழும்பு,ஜூன்15

அரசிலிருந்து விலகுவது தொடர்பான நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், மகாவலி, ஆற்றுப்படுக்கைகள் அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் ஜே.வி.பியினருக்குக் கடிதமொன்றை அனுப்பியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட ஆலோசனையின் பிரகாரம் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்புக் குறித்து மேலும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்த முடியுமென்றும், அரசிலிருந்து ஜே.வி.பி. வில

(16ஆம் பக்கம் பார்க்க)

## மீள்பரிசீலனைக்கு இடமேயில்லை!

### ஜே.வி.பி. அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்15

"பொதுக்கட்டமைப்பு யோசனையைத் தாம் கைவிடுகிறார் என ஜனாதிபதி அறிவிக்காத வரை அரசிலிருந்து விலகுவது தொடர்பான எமது கட்சியின் நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. இன்று நள்ளிரவுக்குள் எமக்கு உரிய பதில் கிடைக்காத பட்சத்தில் நாளை காலைமுதல் எமக்கும் அரசிற்குமிடையிலான தொடர்பு துண்டிக்கப்படுவது நிச்சயம். இது இறுதியும் உறுதியுமான முடிவாகும்."

இவ்வாறு தேசிய விழுமியங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகத் தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

நாம் அரசிற்கு விதித்த காலக்கெடு தொடர்பில் எதுவித மீள்பரிசீலனைகளையும் செய்யவில்லை. இதனை மீள்பரிசீலனை செய்யுமாறு யாரும் எந்த அழுத்தமும் வழங்கப்படவில்லை. இந்தக் காலக்கெடுவை நீடிக்கவும் நாம் விரும்ப

(16ஆம் பக்கம் பார்க்க)

## முத்தலிப் கொலைச் சூத்திரதாரிகளை உடன் கைதுசெய்ய நீதிமன்று பணிப்பு

கொழும்பு, ஜூன்15

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி லெப்.கேணல் முத்தலிப்பின் கொலை தொடர்பான சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நிஹால் பலப்பிட்டிய நேற்று உத்தரவிட்டார்.

முத்தலிப்பின் மரணம் தொடர்பான விசாரணையில் தீர்ப்பு வழங்கிய பின்னரே அவர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

தலை, நெஞ்சுப் பகுதியில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினால் முத்தலிப்பின் மரணம் இடம்பெற்றதாக, சட்ட வைத்திய அதிகாரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் மீது தலைமன்னாரில் சூடு!

கொழும்பு,ஜூன்15

தலைமன்னாரில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று படைத்தரப்பு குற்றஞ்சாட்டியது. ஆனால், இக்குற்றச்சாட்டைப் புலிகள் அடியோடு மறுத்தனர்.

இச்சம்பவம் குறித்து இளைஞர் ஒருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். தலைமன்னாரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அப்பாவியான ஓர் இளைஞனையே கைதுசெய்துள்ளனர். எந்தவிதமான விசாரணைகளும் இன்றிக் கைதுசெய்யப்பட்ட இளைஞனை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 7 மணியளவில் வீதிக் கண்காணிப்புப் பணிகளுக்குச் சென்ற கடற்படையினர்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில் சிப்பாய் ஒருவரின் கையில் காயம் ஏற்பட்டது. பதிலுக்குக் கடற்படையினரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்புக்கு எதிராகக் கொழும்பில் ஊர்வலம்

## பிரதமர் தலைமையில் மக்களை அணிதிரள ஜே.வி.பி. அறைகூவல்

கொழும்பு,ஜூன்15

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்களை நேற்றுக் கொழும்பில் ஒன்று திரட்டிய ஜே.வி.பி., பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை தங்களுக்கு இல்லையென்றும், நாட்டின் மீது பற்றுக்கொண்டவர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அணிதிரள வேண்டுமென்றும் அது அறைகூவல் விடுத்திருக்கின்றது.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் பொரளை கெம்பல் மைதானத்தில் ஒன்று திரண்ட ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. தொண்டர்கள் அங்கிருந்து பதாகைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்பிக்கொண்டு ஊர்வலத்தை ஆரம்பித்தனர். பொரளை, மருதானையூடாக லிப்ரன் சுற்றுவட்டத்தை வந்தடைந்த இந்த ஊர்வலத்தில் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். எனினும், கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பாதுகாப்புக் காரணங்களினால் அங்கு வருகை தரவில்லை.

ஜே.வி.பியின் ஊர்வலத்தையொட்டிக் கொழும்பு லிப்ரன் சுற்றுவட்டாரத்தை அண்டிய பகுதிகள் பல போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தன. ஏராளமான பொலீஸார் வீதியோரங்களில் நிறுத்தப்பட்டிருந்தனர். விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் ஆங்காங்கே முக்கியமான இடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

லிப்ரன் சுற்றுவட்டத்தை ஊர்வலம் வந்தடைந்ததும் அங்கு பொதுக்கூட்டமொன்றும் இடம்பெற்றது. ஜே.வி.பியின் தலைமைச் செயலர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸ ஆகியோர் உரையாற்றினர். விமல் வீரவன்ஸ தனதுரையில் கூறியதாவது:-

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தமது முடிவை அறிவிப்பதற்கு ஜனாதிபதிக்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது. சரியான

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதிகளைக் கண்டித்து தென்மராட்சியில் போராட்டம்

### இன்றுமுதல் 3 நாள்கள் நடைபெறும்

தென்மராட்சி,ஜூன்15

சிங்களப் பேரினவாதிகளின் அராஜகப் போக்கைக் கண்டித்து தென்மராட்சி வணிகர் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று முதல் மூன்று நாள்கள் உண்ணாவிரதமும் கண்டனக் கூட்டங்களும் நடத்தப்படவுள்ளன.

இதன்படி, இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் சாவகச்சேரி பஸ்நிலையத்திலும், நாளை வியாழக்கிழமை கைதடியிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடிகாமத்திலும் இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச அழுத்தத்தினாலேயே ஐ.தே.க.

# அரசுக்கு முண்டுகொடுக்க இணங்கியது!

கொழும்பு, ஜூன்15

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் விடயத்தில் அரசின் காலை, அரசுக்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.வாரினாலும் அந்த விடயத்தில் அரசு கவிழ்ந்து விடாமல் இருக்க ஐக்கிய தேசியக் கட்சி முண்டு கொடுக்கும்.

- இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு உறுதிகூறியமைக்குச் சர்வதேச அழுத்தமே காரணம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசுக்குப் பிடிகொடுக்காமல் நழுவல், வழுவல் போக்கையே அண்மைக்காலம் வரை ஐக்கிய தேசியக் கட்சி கடைப்பிடித்து வந்தது. இவ்விவகாரம் குறித்து நேரில் பேசுவதற்கு ஜனாதிபதி அழைத்தபோதும், அத்தகைய சந்திப்பில் பங்குபற்றாமல் தவிர்க்கும் போக்கையே ஐ.தே.கட்சித் தலைவர் கைக்கொண்டிருந்தார்.

ஆனால், கடந்த ஞாயிறன்று ஜனாதிபதி தரப்பில் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, அடுத்த நாளே ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்து நாற்பது நிமிட நேரம் அவருடன் உரையாடினார் ரணில்.

அது மட்டுமல்ல, பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டை மேலும் கால தாமதப்படுத்தாமல் உடன் செய்துகொள்ளும்படியும் அவர் ஜனாதிபதியை வற்புறுத்தினார். பொதுக்கட்டமைப்பு விடயத்துக்காக அரசை ஜே.வி.பி. கவிழ்க்க முயன்றால், அதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இடம் கொடுக்காது என்ற உறுதிமொழியையும் ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் வழங்கினார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு ஒரு நிலைப்பாட்டை - திடீர் மாற்றுப் போக்கை - ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் கைக்கொண்டதற்குச் சர்வதேச அழுத்தமே காரணம் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இணைத் தலைமை அமைப்புகளான நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய சமூகம் ஆகியவை உட்பட இலங்கை விவகாரத்தில் அமைதித் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டுள்ள சர்வதேச நாடுகள், தடைப்பட்டுள்ள அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்கவும், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு ஒன்றை விரைவில் உருவாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

இலங்கையில் இப்போதுள்ள அரசு கவிழ்ந்து, மாற்றுக் கட்சியான ஐ.தே.க தலைமையில் ஓர் அரசு உருவானாலும், அந்த அரசும் கூட பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, அதன்வழி செயற்படுவது அவசியம் என்பதை இந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் குறுகிய அரசியல் லாபம் கருதி, மாறிமாறிக் காலை இடறும் வேலை செய்யாமல் இரண்டு பிரதான கட்சிகளும் இது விடயத்தில் தேசிய முக்கியத்துவத்துக்கும், முன்னுரிமைக்கும் இடங்கொடுத்து ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும் என்று இரு பிரதான கட்சிகளுக்கும் சர்வதேச அழுத்தம் கடந்த வாரங்களில் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதையடுத்தே இவ்விடயத்தில் எகிறிக் குதிக்காமல் - அடக்கி வாசித்து - ஜனாதிபதியுடன் இசைந்துபோகும் போக்கைக் கடைப்பிடிக்க ஐ.தே.க. தலைவர் ரணில் முடிவெடுத்தார் எனக் கூறப்படுகிறது.

## கிராம அலுவலர்களுக்கு அவசர அழைப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பின்வரும் கிராம அலுவலர் பிரிவிற்குரிய கிராம அலுவலர்களை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

அல்லாரை, உசன், எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, கரம்பைக்குறிச்சி, தாவளை, இயற்றாலை, மந்துவில் வடக்கு ஆகிய பிரிவுகளின் கிராம அலுவலர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-117)

## மாமனிதர் துரைராஜா நினைவு நிகழ்வு

மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## மிருசுவிலில் மின் விநியோகம்

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கான மின் விநியோகம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மிருசுவில் துர்க்கை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் மின் ஆழியை இயக்கி மின் விநியோகத்தினை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் வடமாகாண பதில் மின் அத்தியட்சகர் சண்முகநாதன், சாவகச்சேரி மின் அத்தியட்சகர் க.சடாச்சரமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-117)

# பதவியைத் துறக்கும்போது சந்திரிகா தேசத் துரோகியாகவே வெளியேறுவார்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் கவலை

கொழும்பு, ஜூன்15

இந்த அரசைக் காப்பாற்றுமாறு அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகள் எம்மிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதன் இறுதிக் கட்ட முயற்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். எமக்கு ஒரு கவலைதான் உள்ளது. ஜனாதிபதி சந்திரிகா தனது பதவிக்காலத்தின் இறுதியில் தேசத் துரோகியாக இருந்து பதவியை துறக்கப்போகிறாரே என்ற கவலைதான் அது.

- இவ்வாறு நேற்றுக் கூறினார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் வண. எல்லே குணவன்ஸ தேரர். நேற்று மஹரகமவில் இடம்பெற்ற பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஏற்கனவே, போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் புலிகளுக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிட்டது. இந்தப் பொதுக் கட்டமைப்பின் ஊடாக அவர்களுக்கு நிர்வாக அங்கீகாரம் கிடைத்துவிடக்கூடாதென்றே நாம் கூறுகின்றோம். இதனையே பலரும் வலியுறுத்துகின்றனர்.

பொதுக் கட்டமைப்பு விவகாரத்தினால் அரசு கவிழ்ந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனைத் தடுத்துநிறுத்தி ஆட்சி கவிழ்வதைத் தவிர்க்க உதவுமாறு அரசில் அங்கம் வகிக்கும் பலர் எம்மிடம் கோருகின்றனர். அந்த முயற்சியில் நாம் ஈடுபட்டாலும் அது கைகூடுமென்று நினைக்கவில்லை. அரசு கவிழ்வதைப் பற்றி எமக்குக் கவலையில்லை. ஆனால, தனது பதவியின் இறுதிக்காலத்தில் தேசத்துரோகி என்ற பட்டத்துடன் சந்திரிகா செல்லப் போகின்ற நிலைமையை நினைத்தே நாம் கவலைப்படுகிறோம்.

- இவ்வாறு வண.எல்லே குணவன்ஸ தேரர் மேலும் கூறியிருக்கிறார். (க)

# வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு முற்பணம்

## நாளை கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்15

வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதலாவது கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்வர்.

யாழ். மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனர்நிர்மானத்திட்டத்தின்கீழ் இவ்வருடம் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தம் ஆயிரம் வீடுகள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 90 வீடுகளும் நல்லூரில் 90 வீடுகளும், கோப்பாயில் 125 வீடுகளும் சண்டிலிப்பாயில் 85 வீடுகளும் உடுவிலில் 85 வீடுகளும் தெல்லிப்பழையில் 65 வீடுகளும், பருத்தித்துறையில் 70 வீடுகளும், சங்கானையில் 70 வீடுகளும் சாவகச்சேரியில் 125 வீடுகளும் ஊர்காவற்றுறையில் 40 வீடுகளும் காரைநகரில் 15 வீடுகளும் வேலணையில் 40 வீடுகளும் கரவெட்டியில் 70 வீடுகளும் நெடுந்தீவில் 30 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்காகப் பிரதேச செயலர் பிரிவுகளில் பயனாளிகள் முன்னரே தெரிவுசெய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கட்டடப் பொருள்கொள்வனவு முற்பணமாக 50 ஆயிரம் ரூபாவும் அத்திபாரக்கட்டுப் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் 2ஆம் கட்டமாக 60ஆயிரம் ரூபாவும் நிரந்தரக் கூரை உட்பட கட்டுமானப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் 3ஆம் கட்டமாக 80 ஆயிரம் ரூபாவும் கட்டுமானங்கள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் இறுதிக் கட்டமாக 60 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (ஒ-204-203)

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்களுக்கான விண்ணப்பப்படிவம் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன்15

யாழ்.செயலகத்தில் இயங்கும் பதிவாளர் அலுவலகத்துக்குப் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பப்படிவங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் இப்படிவங்களை சிரமமின்றி பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு பிறப்பு இறப்புப பதிவாளர் எஸ்.ஈஸ்வரதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் கொழும்பில் இருந்து போதுமான அளவில் எடுத்துவரப்பட்டுள்ளன. படிவங்களைத் தாராளமாகப் பாரமெடுக்கும் கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதனைப் பெற்றுக்கொள்ள, தேவையற்ற விதத்தில் பணத்தினைச் செலவழிக்கத் தேவையில்லை.

இலக்கம் குறிப்பிடப்படும் விண்ணப்பப் படிவத்திற்கு 5 ரூபா வசூலிக்கப்படும். இலக்கம் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவத்திற்கு இந்த 5 ரூபாக் கட்டணத்துடன் மேலதிகமாக 5 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு ஒருவார காலத்தில் பத்திரங்கள் அனுப்பப்பட்டுவிடும். எனவே, தேவையற்ற விதத்தில் பணத்தினைச் செலவு செய்வதனை உரியவர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் - என்றார். (ஒ-204-203)

# சமய சந்நிதிகளில்

சங்கானை கூடத்து மனோன்மணி அமமன் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7 மணியளவில் சைவப்புலவர் நித்திய தசீதரன் தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார். (ஒ-13)

❖ ❖ ❖

நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலய பெரும் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-185-203)

❖ ❖ ❖

கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலய பெரும் திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தாத்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஒ-117-203)

❖ ❖ ❖

தொல்புரம், ஜூன்15

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெரும் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பெரும் திருவிழா தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும். திருவிழாவை முன்னிட்டு மூல மூர்த்திகளுக்கு விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. (ஒ-119-203)

❖ ❖ ❖

யாழ்ப்பாணம், ஜூன்15

மாதகல் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7 மணிக்கு தெய்வீகப் பேருரை இடம்பெறவுள்ளது. (ஒ-13)



நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்றுமாலை நடைபெற்ற தமிழகக் கலைஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியில் இரு காட்சிகள். (படங்கள்: கவி)

## புலமைப் பரிசில் பரீட்சை ஓக. 20இல்

5 ஆம் தரம் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு 3 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளனர். இதேவேளை- ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய தகவல் தொழில்நுட்பச் சான்றிதழ்களுக்கான பரீட்சை ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை 5 ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் மண்டபங்களில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-152-204)

# சேது கால்வாய்த் திட்டத்தின்போது கண்காணிக்க 5 நிறுவனங்கள் தெரிவு

தூத்துக்குடி,ஜூன்15

சேது கால்வாய்த் திட்டத்தினால் சுற்றுப்புறச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாது தடுக்கும் நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது. இதன்படி, இத்திட்டப் பணிகள் நடைபெறும் போது சுற்றுச் சூழலைக் கண்காணிக்க ஐந்து ஆராய்ச்சி நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தூத்துக்குடியில் உள்ள சுகந்தி தேவதாசன கடல் ஆராய்ச்சி நிலையம், காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தின் கடல் ஆராய்ச்சித்துறை, கொச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மத்தியகடல் மீன் ஆராய்ச்சி நிலையம், காரைக்குடியில் உள்ள மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலையம், அண்ணாமலை பல்கலைகழகத்தின் கீழ் உள்ள கடல் உயிரியல்துறை ஆகியவை இந்தக் கண்காணிப்பை மேற்கொள்ளவுள்ளன.

கடலில் உள்ள படிவ நிலை, கடல் நீரின் தன்மை, காற்றின் தன்மை ஆகிய மூன்று அம்சங்கள் குறித்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும்.

இதற்காக 4 மணி நேரத்திற்கு ஒரு முறை, 8 மணி நேரத்திற்கு ஒரு முறை தினமும் ஒரு முறை என்று 3 விதமாக ஆய்வுகள் நடத்தப்படும்.

கடலில் கால்வாய் தோண்டும் இடம், தோண்டப்படும் மணலைக் கொட்டும் இடம், சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஆகிய 3 இடங்களில் இந்த ஆய்வுகள் நடத்தப்படும்.

மணல் படிவத்தின் தன்மை, அதில் உள்ள நுண்ணுயிர்களின் தன்மை, அளவு, உயிர்ச்சத்து, தாதுப் பொருள்கள், கடல் நீரின் வெப்ப நிலை, தெளிவு, உவர் தன்மை, கிறீஸ், எண்ணெய ஆகியவை குறித்து உடனுக்குடன் சோதனை நடத்தி கண்டறியப்படும். இதனால், சுற்றுப்புறச் சூழ்நிலையில் சிறுமாற்றம் ஏற்பட்டால் கூட உடனே கண்டுபிடித்துவிட முடியும்.

மன்னார் வளைகுடா பகுதியில் தோண்டும் போது இங்குள்ள பவளப் பாறைகள் குறித்து விசேட கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ள ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்தார்.

கால்வாய் தோண்டும் பணி துவங்கியதில் இருந்து முடியும் வரை 3 ஆண்டுகளுக்கு இந்த கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படும். (ஒ)

## கருணாநிதியி ர் சகோதரி மரணம்

சென்னை,ஜூன்15

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மூத்த சகோதரி பெரியநாயகி அம்பாள் நேற்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 94. திரைப்பட இயக்குநர் அமிர்தத்தின் மனைவி ஆவார்.

சில நாளகளாக நோய்வாய்ப்பட்டு சென்னை அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவரின் உடல்நிலை நேற்று திடீரென மோசமடைந்தது. சிறிது நேரத்தில் அவரின் உயிர் பிரிந்தது.அவரது உடல் பெசன்நகர் மின் மயானத்தில் இன்று தகனஞ்செய்யப்படுகிறது

உலக அரங்கில்

# 5,000 பேரின் குடியுரிமை கட்டார் நாட்டில் பறிப்பு!

டோகா,ஜூன்15

கட்டாரில் 5 ஆயிரம் பேரின் குடியுரிமையை அந்நாட்டு அரசு பறித்துள்ளது. அதில் பெரும்பாலமை ஆள்கள் சவூதி அரேபியாவிலும் குடியுரிமை பெற்றிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டாரைத் தளமாகக் கொண்டியங்கும் அல்-ஜஸீரா தொலைக்காட்சியின் ஒளிபரப்புக் காரணமாக கட்டார் மற்றும் சவூதி அரேபியாவுக்கும் இடையேயான உறவு மோசமடைந்துவரும் நிலையிலேயே கட்டார் அரசு இவ்வாறான தீர்மானமொன்றை எடுத்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டார் மற்றும் சவூதி அரேபியாவில் இரட்டைக்குடியுரிமை பெற்றவர்கள் பலர் கட்டாரில் வசித்து வருகின்றனர். கட்டாரில் பிரச்சினைக்குரிய அல்- ஜஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பு காரணமாக இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு மோசமடைந்துவருகிறது.

இந்த முடிவால் அல்-முரா பழங்குடியின மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கட்டார் எடுத்துள்ள முடிவால் அவர்கள் எத்தகைய இழப்பை சந்திப்பார்கள் என்ற விவரம் அரசால் வெளியிடப்படவில்லை.

கடந்த 1995ஆம் ஆண்டு கட்டார் மன்னராக இருந்து ஷேக் காலிபா பின் ஹமத் அல் தனி அவரது மகனால் பதவிநீக்கம் செய்யப்பட்டார். மீண்டும் ஆட்சியில் அமர்ந்த 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட புரட்சி முறியடிக்கப்பட்டது.

இதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பழங்குடியின மக்களைப் பழிவாங்குவதற்காகவே குடியுரிமை பறிக்கப்படுகிறது என்றுபத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பாலியல் குற்றச்சாட்டிலிருந்து மைக்கேல் ஜக்ஸன் விடுதலை

## சாந்தமரியா நீதிமன்றம் நேற்றுப் பரபரப்புத் தீர்ப்பு

வாஷிங்டன்,ஜூன்15

பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸன், அவர் மீதான பாலியல் குற்றச்சாட்டு உட்பட அனைத்துக் குற்றச் சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என நேற்று சாந்தமரியா நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.

2003ஆம் ஆண்டு புற்று நோயால் பாதிக் கப்பட்ட 13 வயதுச் சிறுவன் ஒருவனுடன் தகாத முறையில் நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டு உட்பட 10 குற்றங்கள் சாட்டப்பட்டு விசாரணை முடிவுற்ற பின்னர், 12 நீதிபதிகள் கொண்ட குழு 7 நாள்கள் தீவிர ஆலோசனை நடத்தினர். அதன் பின்னரே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொப்பிசை உலகில் முடிசூடா மன்னராகத் திகழும் மைக்கல் ஜக்ஸன் 13 வயதுச் சிறுவனுடன் தகாத உறவு கொண்டார். அத்துடன், அவருக்கு மதுவும் அருந்தக் கொடுத்தார் என பாதிக்கப்பட்ட சிறுவனான ஆர்வி கோவின் தாய் 2003ஆம் ஆண்டு கலிபோர்னிய மாநிலத்தின் சாந்தமரியா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்குத் தொடர்பாக 2003ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட மைக்கல் ஜக்ஸன், பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த சிறுவனின் தாய் உட்பட 140 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

ஜக்ஸனுக்கு ஆதரவாகப் பிரபல ஹொலி வுட் நடிகை எலிசருபத் டெய்லர் உட்படப் பல பிரபலங்கள் சாட்சி கூறினர். சுமார் 600 ஆவணங்கள் தாக்கல்செய்யப்பட்டன.

விசாரணைகள் முடிவுற்ற பின்னர் தீர்ப்பு வழங்குவது தொடர்பாக 12 நீதிபதிகளைக் கொண்ட குழு 7 நாள்கள் தீவிர ஆலோசனை நடத்தினர்.

ஜக்ஸன் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 20 வருட சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், இந்த வழக்கின் தீர்ப்பு வெகு ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது.

பணம் பறிக்கும் நோக்குடனேயே இந்த நாடகம் நடத்தப்பட்டது என்று வழக்கறிஞர்களின் விவாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி கள் அவரைக் குற்றங்களில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தனர்.

இந்த தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்றின் வெளியே குழுமியிருந்த ஆயிரக் கணக்கான ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ரசிகர்களை நோக்கி கைகளை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்த ஜக்ஸன் என்னிடம் பணம பறிப்பதற்காக நடத்தப்பட்ட நாடகம் முடிவுற்றது. இறுதியில் நீதிவென்றது என்று கூறினார்.(ஒ)

# ஐ.நா. சீர்திருத்தம் குறித்து ஜி.77 அமைப்பு விவாதிப்பு

டுபாய்,ஜூன்15

ஐ.நா. சபையின் சீர்திருத்தம் குறித்து ஜி.77 அமைப்பின் கூட்டம் விவாதிக்கும் என ஐ.நா. தெரிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டோஹாவில் ஆரம்பமான ஐந்து நாள் கூட்டத்தில் ஐ.நா. சபையின் சீர்திருத்தம் மற்றும் வளர்முக நாடுகளின் இடையில் ஒத்துழைப்பை அதிகரித்தல் என்பன குறித்து விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. சபையின் சீர்திருத்தத்தின் அடிப்படை அம்சங்களை ஏற்பது, வளரும் நாடுகளின் நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்படுவதே இக்கூட்டத்தின் நோக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜி.77 அமைப்பில் உள்ள நாடுகளில் இந்தியா, பிரேசில் ஆகியன ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தைப் பெற முயற்சி செய்து வருகின்றன.

கட்டார் தலைநகரில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரிட்டன் பிரதமர் டொனி பிளேயர், ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான், ஐரோப் பிய ஒன்றியத் தலைவர் லக்ஸம்பர்க், பிரத மர் ஜீன் - கிளாட் ஜங்கர் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# 50 ஆயிரம் அகதிகளுக்கு மலேசியாவில் தொழில் வழங்குமாறு ஐ.நா.வேண்டுகோள்

தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தவித்துக் கொண்டிருக்கும் மலேசியா 50 ஆயிரம் அகதிகளுக்குச் சட்டபூர்வமாக வேலைவாய்ப்பு வழங்கவேண்டும் என்று ஐ.நா.அகதிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வேலைக்கு ஆள்கள் தேவை என்ற விளம்பரப்பலகை மலேசியாவில் கட்டுமான பணியிடங்கள், விவசாயப் பண்ணைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் வாசல்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் மலேசியாவில் இருந்து ஒரு லட்சம் அகதிகள் வெளியேற்றப்பட்டனர்.

இதுகுறித்து அதிகளுக்கான ஐநா.பிரதிநிதி வோல்கர் டர்க் கூறியதாவது:-

தற்போது மலேசியாவில் 50 ஆயிரம் பேர் தங்களை அகதிகளாகப் பதிவுசெய்துள்ளனர். இவர்களில் 20 ஆயிரம் பேர் இந்தோனேஷியாவின் அச்சே பகுதியைச் சேர்ந்தவர்கள். 10ஆயிரம் பேர் மியான்மரைச் சேர்ந்த ரோகிஙயா என்ற சிறுபான்மை முஸ்லிம்கள்.

இவர்களைச் சட்ட பூர்வமாக பணிகளில் அமர்த்த மலேசியா அரசு முன்வரவேண்டும். ஆண்டுதோறும் ஜூன் மாதம் 20ஆம் திகதி உலக அகதிகள் தினம் அனுசரிக்கப்படும். உலக அகதிகள் தின பரிசாக மலேசியா அரசு அங்குள்ள அகதிகள் 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

-இவ்வாறு வோல் கர் டர்க் கூறினார்.

# சிலியில் நேற்று நில அதிர்வு!

சிலியில் நேற்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நில அதிர்வினால் 8 பேர் உயிரிழந்தனர். பல கட்டடங்கள் இடிந்து விழுந்து பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட சிலியின் கரையோர நகரான இக்கியூகிவ்வில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 7.9 புள்ளியாக பதிவாயிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில அதிர்வினால் ஆழிப்பேரலை ஏற்படும் எனும் அச்சம் காரணமாக நூற்றுக் கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர் என்றும்-

மின்சாரம், தொலைத் தொடர்புகள் என்பன துண்டிக்கப்பட்டதுடன், பல வீடுகள் சேதமடைந்துள்ளன என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

1960ஆம் ஆண்டு சிலியில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.







Jayoda ஜயோதா ජයෝදා

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6095282 முதல் 6108232 வரை

சீட்டிழுப்பு இல. 141 திகதி 13-6-2005

வெற்றி எண்கள் 3 9 4 3 3 4 சுப்பர் எண் 22

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,80,05,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,80,05,850/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 116 | 5,000/- | 5,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,146 | 500/- | 5,73,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,465 | 50/- | 5,73,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 113,607 | 10/- | 11,36,070/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 50,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,154 | 100/- | 1,15,400/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,359 | 20/- | 2,27,180/- |
| மொத்தம் | 1,38,989 | | 55,68,625/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,68,625/-

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 2,83,24,625/-

தொடர் இல. 7048030 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூன் 16 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6107705-4-12
6096126-6-91
6097829-8-31
6102115-8-16
6097929-2-70
6097210-2-81
6105741-0-48
6099266-2-46

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

**அன்புடையீர்!**

சுன்னாகத்தில் 22-05-2005 அன்று சிவபதமடைந்த
எமது குலவிளக்கு சங்கானை
சரவணமுத்து சேதுகாவலர் (M.A.) அவர்களின்
மனைவி **செல்வநாயகியின்**

அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்தியமும் 21-06-2005 செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பூசையில் கலந்துகொள்ளும்படி அன்பாகவும் தயவாகவும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவர், சங்கானை அமரர் சரவணமுத்து, சேதுகாவலரின் (M.A. - ஓய்வுபெற்ற அதிபர்) பாசமிகு மனைவியும், சே.இராச வல்லவன் (B.Sc. ஓய்வுபெற்ற அதிபர்), அமரர் ஸ்ரீசெல்வ கௌரி (B.A.), லயன் சேது விபுலானந்தா (சூட்டி மாஸ்ரர், விபுல்), டாக்டர் க.ஆனந்தகௌரி (பல் வைத்தியர், லண் டன்), சே.ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தாயும் மயிலிட்டி அமரர் காசிநாதர் ஸ்ரீரங்கநாதன் (பொறியியலாளர்), அமரர் இ.உருக்குமணிதேவி, சுன்னாகம் ஆனந்தநடராசா, கணா னந்தன் (கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீதர்சனன் (B.A. விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), இ. முகுந்தன் (B.Sc.), இ.நளிந்தினி (B.Com.), ஸ்ரீ.நிரசாந்தி (மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), இ.தபோரூபன் (மாண வன்), அமரர் க.பைரவி (லண்டன்), க.கோகுலன் (மாண வன் - லண்டன்), த.ஆனந்தஜோதி (B.A.), மு.கஜதேவி (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

திருமதி சேதுகாவலர் செல்வநாயகியின் மறைவு குறித்த செய்தியை உரிய முறைகளில் அறிவிக்கத் தவறிய போதும் கேள்விப்பட்டதும் உடன்வந்து கலந்துகொண்டோருக்கும் பின்பு வந்து ஆறுதல் கூறியோருக்கும் செய்திகள் மூலம் துக்கம் விசாரித்து ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவியோருக்கும் அந்தியேட்டியிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்துகொள்ள இருப்போருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தயவுசெய்து இந்த அழைப்பை நேரடி அழைப்பாக ஏற்று 21-06-2005 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது குலவிளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்பு டன் அழைக்கின்றோம்.

**- சேதுகாவலர் குடும்பத்தினர்.**

*17, செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.*

தொலைபேசி:
இலங்கை: 0602212709, 0776051927, 0777730087,
021 222 6337, 0777738484
லண்டன்: 044 208 681 85 07, மலேசியா: 006 037957 8187
ஆஸ்திரேலியா: 006 129 648 59 24, கனடா: 001 905 828 93 07
அமெரிக்கா: 001 781 942 70 87 (சி43409) (24-18-16)


## கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஜுன்15

யாழ். இந்துக் கல்லூரி சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கான அவசர கலந் துரையாடல் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நயினாதீவு உற்சவகால சேவை தொடர் பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந் தப்பட்ட அனைவரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு இந்தக் கலந்துரையாடலில் பங்குகொள்ளு மாறு படையணித் தலைவர் பி.பிரணவன் கேட் டுள்ளார். (ஒ-203)

★★★

வடஇலங்கை பத்தி ரிகையாளர் சங்கத் தின் கலந்துரையா டல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற் பகல் 4 மணிக்குச் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.கதிர்காமத்தம்பி தலைமையில் நடை பெறவுள்ள கலந்து ரையாடலில் நடப் பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-204)

## செஞ்சிலுவை நிர்வாகிகள்

இலங்கை செஞ் சிலுவைச் சங்கப் பருத்தித்துறைக் கிளையின் கிளைக் குழு தேர்தல் அண் மையில் நடைபெற் றது. இதில் தலைவ ராக சூ.தவராசாவும் செயலாளராக பருத் தித்துறை ஆதார வைத்தியசாலை உத் தியோகத்தர் வே. ஷோபனாவும் பொரு ளாளராக சித்தவைத் தியரும் பண்டிதருமான செ.சிவக்கொழுந் துவும் தெரிவுசெய்யப் பட்டனர். இவர்களு டன் எட்டுப் பேரைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய் யப்பட்டது. (ஒ-78)

## ஆசிரியர்களுக்கான பயிலரங்கு

வலி.தெற்கு,ஜுன்15

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பிக்கும் கணித பாட ஆசிரியர்களுக்கு கேத்திர கணித அமைப்பு தொடர்பான பயிலரங்கு இன்று புதன்கிழமை காலை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள் ளது.

ஏற்கனவே நடைபெற்றுவந்த பயிலரங்குகளின் ஏழாவது பயிலரங் காக நடைபெறவுள்ள இதில் முன்னதாகக் கலந்துகொண்ட சகல ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (3-152)


# NATIONAL HIV/AIDS PREVENTION PROJECT
# GRANT NO: H013-CE
# NATIONAL COMPETITIVE BIDDING
# (CIVIL WORKS)
# INVITATION FOR BIDS (IFB)

**IFB No: NHAPP/IDA/NCB/W/29/04**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from the International Development Association towards the cost of National HIV/AIDS Prevention Project and intends to apply part of the funds to cover eligible payments under the Contract as detailed in table below. Bidding is opened to all bidders from eligible source countries as defined in the Guidelines: Procurement under IBRD Loans and IDA Credits.
2. The Project Director, National HIV/AIDS Prevention Project, invites sealed bids from eligible bidders for the works as detailed in table below.
3. Bidding documents (in two copies) may be purchased till 11:00 hrs on 30/06/2005 on the submission of a written application, from the Project Director, National HIV/AIDS Prevention Project at the address given below for a non refundable fee of Rs. 1,000/- for each set either in cash or Demand Draft from any Scheduled Bank payable at Colombo and in favour of Project Director, National HIV/AIDS Prevention Project.
4. Interested bidders may inspect Bidding document free of charge prior to collection if desired and obtain further information from the address as under

**Procurement Management Specialist**
**National HIV/AIDS Prevention Project**
**Premises Opposite No. 29**
**De Saram Place, Colombo 10**
**Tel/Fax: 2677030/2687015**
**e-mail: psnhapp@ sltnet.lk**

5. Bids shall be valid for a period of 90 days after date of bid opening and must be accompanied by security of amount Rupees Fifteen Thousand (Rs. 15,000/-) drawn in favour of Project Director, National HIV/AIDS Prevention Project on or before 11:00 hrs of 08/07/2005, at which time they will be opened in the presence of the bidders who wish to attend. If the office happens to be closed on the date of receipt of the bids as specified, the bids will be received and opened on the next working day at the same time and venue.
6. Other details can be seen in the bidding documents.

**TABLE**

| Contract Package No. | Name of work Additions, | Bid Security (Rs.) | Cost of Bidding Document (Rs.) | Period of Completion | ICTAD Grade Building Construction |
|---|---|---|---|---|---|
| NHAPP/IDA/NCB/W/29/04 | Alternations, Repairs and Refurbishment of Chest Clinic at the General Hospital Kilinochchi | 15,000/- | 1,000.00 | Four (04) Months | M-9 |

7. Bidders are advised to note the minimum qualification criteria specified in Clause 4 of the Instructions to Bidders and as appearing in the Bidding Data to qualify for the award of the individual contract.
8. Bidders are required to be registered with the Institution of Construction Training and Development (ICTAD) under Grade M9 (Building Construction) or above and possess valid membership of National Construction Association of Sri Lanka (NCASL). The Contractor, or his identified sub-Contractor; for electrical and water supply / Sanitary engineering work is desirable to possess a valid registration with ICTAD and NCASL

**Project Director**
**National HIV/AIDS Prevention Project Premises Opposite No. 29, De Saram Place Colombo 10**
**Sri Lanka**
**Te1:2677030 Fax: 2687015** (C/43411) (24)
**E-mail: psnhapp@sltnet.lk**

Note: There will be a pre bid-meeting on 23rd June 2005, at 11.00 a.m. in the office of the National Programme for Tuberculosis Control & Chest Diseases, Narahenpitia.



யாழ்.மக்களின் அமோக ஆதரவுடன்

# நல்லூரில் தொடர்மாடி வீடுகள்
## உத்தியோகத்தர்கள் குடியிருப்புக்கள்

★ "வீடு" என்ற சொல்லுக்கே குறைந்தது 70இலட்சம் தேவைப்படும் இக்காலகட்டத்தில் ----

★ வெறுங்காணிகளே விற்பனைக்கில்லாத நல்லூர்ப் பிரதேசத்தில் ----

★ வெறும் 28 இலட்சத்துடன் 950 - 1000 சதுர அடி கொண்ட, Tiles பதிக்கப்பட்ட,வாகனத்தரிப்பிடங்கள் கொண்ட தனித்தனி மின் சார, தண்ணீர் வசதி கொண்ட, ஆலயத்தை அண்மித்த ரம்மி யமான சூழலில் அழகிய அளவானவீடு ஒன்று உங்களிற்காகக் காத்திருக்கின்றது.

★ உறுதியான உறுதிப்பத்திரங்கள் வழங்குகின்றோம்.

**உத்தேச வரைபடம்**




☞ எதிர்வரும் (22/06/2005) புதன்கிழமையன்று வாங்குபவர் களை இறுதியாகத் தீர்மானிக்கவுள்ளோம். அதன்பின்னர் எவ்வித விசாரணைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

# தயா ஏஜென்சி
இல. 3, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

★ இரவு 7 மணிக்குப்பின் 0777 - 283795தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

(C/43412)(53)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# காலம் பிந்திய ஞானம்

★ ஜே.வி.பியினரின் தலையீட்டினால் இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்பட்டன.

★ சமுர்த்தி உதவித் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதும் பின்னடைவுக்கு உள்ளாகியது.

★ ஜே.வி.பி. முன்னெடுத்த பத்தாயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டம் பயனே அற்றது.

★ மொத்தத்தில் ஜே.வி.பி. போட்டு வந்த முட்டுக்கட்டைகளால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இந்த ஆட்சிக் காலத்தில் எதுவுமே உருப்படியாகச் செய்யமுடியவில்லை.

- இவ்வளவும் இந்த அரசுக்கு எதிர்த்தரப்பில் இருக்கும் எதிர்க்கட்சிகளினால் இப்போது கூறப்பட்டவையல்ல. இந்த அரசின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவின் 'ஒப்புதல் வாக்குமூலம்' இது.

நேற்றுமுன்தினம் தமது மாளிகைக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசியபோது அவர்களிடம் ஜனாதிபதி தெரிவித்த கருத்துகள்தான் இவை.

நாட்டுக்கு அவசரமும் அவசியமானதுமான விவகாரங்களாகக் கருதப்பட்ட - இலங்கை மின்சாரசபையை மறுசீரமைத்தல், பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை விற்றல் போன்ற - விடயங்களைக் கூட முன்னெடுக்க முடியாமல், ஜே.வி.பி. போட்டதாளத்துக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு ஆடிய ஆட்டம் நாடறிந்த உண்மை.

ஜே.வி.பியின் அழுத்தத்துக்கு அடிபணிந்து, வெளியார் (இலங்கைப் பிரஜை அல்லாதவர்கள்) இலங்கையில் சொத்து வாங்குவதற்கு நூறு வீத வரி விதிக்கும் திட்டம்வரை, அந்நிய முதலீட்டை ஊக்குவிப்பதற்குப் பதிலாக அதை முறியடிக்கும் திட்டங்களைத்தானே இநத அரசு செயற்படுத்தியது...?

கடந்த ஆண்டு ஏப்ரலில் பதவியேற்ற இந்த அரசு இன்று - இந்தக் கணம்வரை - இந்தப் பதினான்கு மாதகாலத்தில் - சாதித்தது என்ன?

அரச சபைகள், திணைக்களங்களுக்குப் பணிப்பாளர்கள் நியமிப்பது முதல் அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை விவகாரம் வரை அரசின் உள்வீட்டு விவகாரங்கள் ஒவ்வொன்றிலும் ஆளுங்கூட்டமைப்புக்குள் 'குடுமிப்பிடி' சண்டை நடத்தியதைத் தவிர வேறொன்றும் உருப்படியாக நடக்கவேயில்லை. அதனைத் தமது கட்சிக்காரர்கள் மத்தியில் ஒப்புக்கொள்ளும் விரக்திநிலைக்கு ஜனாதிபதி குமாரதுங்க போயிருக்கின்றார் - தள்ளப்பட்டிருக்கின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காகப் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் தனது திட்டத்தைத் தாம் கைவிட்டுவிட்டார் என ஜனாதிபதி அறிவிப்பதற்கு ஜே.வி.பி. கொடுத்த காலக்கெடு இன்று நள்ளிரவுடன் காலாவதியாகிறது. அப்படி ஜனாதிபதி அறிவிப்பதற்கான வாய்ப்புகள் இன்றைய அரசியல் நிலைமையில் மிகமிகக் குறைவு என்பதால் இந்த அரசுக் கூட்டமைப்பு நாளையுடன் முடிவுக்கு வருகிறது என நம்பலாம். அரசு அதிகாரத்திலிருந்து சமாதான விரோதிகள் அகலப்போகிறார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறுவதால் அரசுத் தரப்பில் இனி பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளே எஞ்சப் போகின்றன. ஜே.வி.பி. வெளியேற்றத்தால் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழக்கும் ஆளும் தரப்பு எவ்வளவு காலத்துக்குத் தனது அரசைக் கவிழவிடாமல் தக்கவைத்து ஆட்சியைக் கொண்டுசெல்லும் என்பது கேள்விக்குறியே.

எது; எப்படி என்றாலும் போகிற போக்கில் பார்த்தால் ஐந்து ஆண்டில் நான்காவது பொதுத்தேர்தலை நாடு சந்திக்கப்போகின்றது.

பெரும்பான்மைப் பலத்தோடு நாட்டை ஆட்சிசெய்த - இரண்டு தசாப்தகால யுத்தத்தின் கோரப்பிடியிலிருந்து இலங்கைத் தீவை தற்காலிகமாகவேனும் விடுவித்து, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றை முன்னெடுப்பதற்கு முயன்ற - ஐக்கிய தேசிய முன்னணி அரசை, தமது பதவி ஆசை, அதிகார வெறி ஆகியவை காரணமாக கலைத்து, அதனைத் தொடர்ந்து பேரினவாதிகளைத் தன்னோடு அணிசேர்த்து அதன்மூலம் நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றிய ஜனாதிபதி, தம்முடைய இந்தத் தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்யமுடியாமல் இப்போது விழிக்கிறார்; புலம்புகிறார். தாம் கூட்டுச்சேர்த்த ஜே.வி.பியை அவர் இப்போது திட்டித்தீர்ப்பது அதைத்தான் காட்டுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா செய்த அதிகாரத் தவறினால் நாடு அரசியல் ஸ்திரமற்ற நிலைக்கு - பொருளாதார வீழ்ச்சிக்கு - முகங்கொடுத்துத் தடுமாறுவது மட்டுமல்ல, தேசியப் பிணக்கான இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வுகாண்பதற்கான வாய்ப்பையும் கடந்த இருபது மாதங்களாகத் தவறவிட்டுப் போர் விளிம்மை நோக்கி நகர்ந்து நிற்கின்றது.

இன்றைய நிலைமைக்கு வெறுமனே ஜே.வி.பியைத் திட்டித் தீர்ப்பதுடன் ஜனாதிபதியின் கடப்பாடு தீர்ந்துவிடாது. மெதுவானாலும், தடங்கலின்றி முன்நகர்ந்து கொண்டிருந்த அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தித் தாம் குழப்பியதன் விளைவே இலங்கைத் தீவின் இன்றைய இக்கட்டுநிலைக்குக் காரணம் என்பதையும் பகிரங்கமாக ஒப்புக் கொள்வதும் அவரது பொறுப்பாகும்.

# பேரினவாதப் போக்கினைக் கைவிடாவிட்டால் தமிழர்கள் இறுதிமுடிவான தனியரசை நாடுவர்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்15

பேரினவாதப் போக்கினைக் கைவிட்டு, அரசியல் தீர்வுக்காக வழியமைக்க சிங்களதேசம் முன்வரவேண்டும். இல்லையேல் பொறுமையின் எல்லையில் இருக்கும் தமிழர்கள் தனித்து ஒரு முடிவு எடுக்கவேண்டி வரும். அதுவே இறுதித்தீர்வான தமிழீழம் என்ற தனிநாட்டுக்கான முடிவாக அமையும்.

- இவ்வாறு சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிங்கள, பௌத்த பேரினவாதப் போக்கினைக் கண்டிக்கின்றோம். அந்தப் பேரினவாதப் போக்கினைக் கைவிட்டு எமது மக்களுக்கான நியாயமான உரிமையின் அவசியத்தினைத் தென்னிலங்கையின் மதவெறி பிடித்தவர்களும் இனவெறி பிடித்தவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

நாட்டின் ஒரு போர் ஓய்ந்த, அரசியல் ரீதியாக தீர்வினைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் தமிழர்கள் இருக்கின்ற இவ்வேளையில், மீண்டும் ஒரு யுத்தத்தினை எம்மீது திணிக்கும் நோக்கோடு தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளின் போக்கு எமக்கு விசனத்தையும் சிறிலங்கா அரசின் மீது விரக்தி நிலையையும் தோற்றுவித்துள்ளது.

சிறிலங்கா அரசியல் வரலாற்றில், தமிழர்களுக்கான அடக்குமுறை கடந்த காலத்தில் மொழிரீதியாக திணித்த சிங்கள தேசம் தற்போது மதரீதியான முறையில் தமிழர்களை அடக்கி, சீண்ட நினைக்கின்றது. இது வெறித்தனமானது. தமிழர்கள் தமது உரிமைகளைத் தாமே தீர்மானிக்கவேண்டும் என்ற உண்மை நிலையைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்றது.

எந்த அரசும் தமிழர்களின் விடயத்தில் நியாயமான, நிலையான தீர்வினை முன்வைக்கப் போவதில்லை. அவற்றிற்கு, தடையாகச் சிங்களப் பேரினவாத சக்திகள் இருக்கும் என்பதும், வரலாறு தமிழ் மக்களுக்கு உண்மையை எடுத்தியம்பியுள்ளது.

வெறுமனே கட்டமைப்பாக இருக்கும் சுனாமி மீள்கட்டுமான அமைப்பினை உருவாக்க முடியாத அரசு எவ்வாறு தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வினை முன்வைக்கப்போகிறது? மனிதாபிமானப் பணிக்கு மதம் தடையாக இருக்கின்றது என்றால் ஏனைய அரசியல் தீர்வுகளுக்கு எப்படி இந்த மதவாதப் போக்கு இருக்கும்?

இது இன்றைய அரசியல் கள யதார்த்தத்தினால் தமிழ்பேசும் மக்களின் மனதில் எழுந்துள்ள கேள்வி.

தமிழர்களைப் பொறுத்தவரை, சிறிலங்கா அரசிடம் கையேந்தி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. எமக்கென்று பலமான படையையும் பலமான கட்டமைப்பும் தளராத தலைவனையும் கொண்டிருக்கின்ற தமிழர்களாகிய நாம் எந்த வேளையும் எமது உரிமையை நாமே பெறக்கூடிய வலுவான நிலையில்தான் இருக்கின்றோம். இதனை சிறிலங்கா சிங்கள தேசம் நன்குணரவேண்டும் - என்றுள்ளது.

(8-7-86)

# சிறுவர்,பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றி தகவல்தருமாறு பொலீஸார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

குடாநாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்றும்-

அச்சம் காரணமாக இத்தகைய குற்றங்கள் குறித்து பாதிக்கப்படுபவர்கள் முறையிடுவதில்லை என்றும் -

ஆகவே, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து யாழ். பொலீஸ் நிலைய பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவுடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தந்து உதவுமாறும் -

அப்பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.கல்யாணி கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

அண்மைக்காலமாக குடாநாட்டில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீது குற்றங்கள் கட்டவீழ்த்து விடப்படுவது அதிகரித்துள்ளது. இத்தகைய குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகளவில் கிடைக்கப்பெற்றுவருகின்றன.

பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களை அவர்களது பெற்றோர் தமது சுயலாபத்திற்காக வேலைக்கு அமர்த்துகின்றனர். கசிப்புக்காய்ச்சி விற்கும் கும்பல்களைச் சேர்ந்த ஆண்கள் பொலீஸாரிடம் அகப்படும் சந்தர்ப்பங்களில் மனைவியைக கட்டாயப்படுத்தி அந்தப் பெண் மீது பழி போட்டு பொலீஸாரிடம் சிக்கவைத்து தாம் தப்பிக்கொள்கின்றனர்.

பணிபுரியும் அலுவலகங்களில் உடன் பணியாற்றும் ஆண்களால் பெண்கள் பல வித இம்சைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர். இவைதவிர வேறுபல்வேறு வழிகளிலும் பெண்களும் சிறுவர்களும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

எனவே, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஏதாவது தகவல் அறிந்தவர்கள் யாழ். பொலீஸ் நிலையத்தில் இதற்கென அமைக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் பிரிவுடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தந்துதவவும் - இவ்வாறு அவர் கேட்டுள்ளார்.

(ஒ-13)

# யாழ்.வலய நிர்வாகத்துறையில் அலுவலர் பற்றாக்குறை நீடிக்கிறது

## இதனால் பணிகள் பாதிப்பு என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.கல்விவலய நிர்வாகத்துறையில் நீண்டகாலமாக உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுவதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் என்.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இந்த உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து தருமாறு பல தடவைகள் கல்வி அமைச்சிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் -

ஆனாலும் இதுவரை எந்தவித நடவடிக்கையையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என்றும் - அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக, எழுதுவினைஞர் பணிக்கே வெற்றிடம் அதிகமாகவுள்ளது. சுமார் பதினொரு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகின்றனர்.

இத்தகைய ஆளணிப் பற்றாக்குறையால் திணைக்களத்தின் பணிகளை செவ்வனே செய்வதற்குத் தடைகள் ஏற்படுகின்றன -என்றார் அவர்.

(ஒ-13)

# கருப்புலிகள் நாளையொட்டி கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்15

கரும்புலிகள் நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கவிதைப் போட்டியை நடத்தவுள்ளது.

தேசவிடுதலையை மையமாகக் கொண்டு, 30 முதல் 40 வரிகளுக்குள் படைப்புகள் அமையவேண்டும்.

கவிதைகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் 'கவிதைப்போட்டி-2005' தலைமைச் செயலகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற' முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-202)

# கண்ணாடிப்பிட்டி மயானத்தை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூன்15

யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் இரண்டரை லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியினை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

யுத்த அனர்த்தங்களின்போது மயானத்தில் உள்ள மண்டபம், மதில்கள் ஆகியவை சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்படுவதுடன் தகனம் செய்யப்படும் இடத்தில் இரு கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை-

மயானத்திற்குச் செல்லும் மக்கள் நலன்கருதி குடிதண்ணீர் விநியோகிப்பதற்கும் குழாய்கள் பொருத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(8-117)

**நாளை**

ஆனி 02
வியாழக்கிழமை
16.06.2005
திதி : நவமி
பிற்பகல் 04.49 வரை
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 12.13 வரை
சுபநேரம் : 07.23- 08.53
ராகுகாலம்: 01.23 - 02.53
(யாவும் பழைய நேரப்படி)

# சாதாரணதர பரீட்சார்த்திகளுக்கு கணித பாடத்தில் விசேட பரீட்சை

## ஜூலை 31ஆம் திகதி நடைபெறும்

வலி.தெற்கு,ஜூன்15

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான கணித பாட விசேட பரீட்சை, ஜூலை மாதம் 31ஆம் திகதி நடைபெறவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

கணித பாட அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சாத்திகளுக்குக் கணித பாடத்தில் விசேட பரீட்சை ஒன்றை நாடளாவிய ரீதியில் நடத்தக் கல்வி அமைச்சு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கடந்த காலங்களில் கணித பாடத்தில் சித்தியடைவோர் தொகை 40 சத வீதத்துக்குட்பட்டதாகவே இருந்து வருவதாகவும் இந்த அடைவு மட்டத்தை 60 சதவீதமாக உயர்த்துவதே இவ்விசேட பரீட்சையின் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லின் ஆலோசனைகளுக்கமைய முன்னோடிப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு மூன்று லட்சத்து 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் எனவும் அனுர எதிரிசிங்க கூறியுள்ளார்.

(8-152)

**உதயவாக்கு**

எல்லா எண்ணங்களுமே மனதில் சுடச்சுட உதிப்பவையல்ல; எண்ணி எண்ணச் சூடேறியவைதான் அதிகம்.

- சிங்செள

# கலாபூசணம் சோக சோபித சொர்ணக் கவிக்குயில்
# வே.க.இரத்தினம் அவர்களின்
# 31 ஆம் நாள் நினைவுச் சிறப்பிதழ்

## ஆதீன முதல்வரின் இரங்கல் செய்தி

நாடக நடிகர் வி.கே.இரத்தினம் அவர்களுடைய மறைவு அனைவருக்கும் வேதனையைத் தந்தது. பாரம்பரிய கலைகளை இந்நாட்டில் நீண்டகாலமாக வளர்த்தெடுத்த பெருமை இரத்தினத்தைச் சாரும். அரியாலை மண்ணிற்குப் பல இசைக் கலைஞர்களின் பெருமை உண்டு. இவ்வரிசையில் இரத்தினமும் ஒருவராவார். வரலாற்று இசை நாடகங்களில் பெண் பாத்திரத்தைத் தாங்கி சிறப்பானமுறையில் நடித்த பெருமை இவரைச் சாரும். இவருடைய உடல் கட்டமைப்பும், குரல் வளமும் எடுக்கின்ற பாத்திரத்திற்கு மிகவும் சிறப்புடையதாக அமைந்துள்ளது. குறிப்பாக சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சாவித்திரியாக, மயான காண்டத்தில் சந்திரமதியாக கொண்ட காட்சிகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இவருடைய இழப்பு கலைக்கு மட்டுமன்றி உலக ரசிகர்களுக்கும் பேரிழப்பாகும்.

இவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரை இறைவன் ஆசீர்வதிப்பாராக. திரு.இரத்தினத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
*ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்.*

## காவிய நாடகக் கதாநாயகன்

யாழ்ப்பாணத்தில் 60 களில் ஏற்பட்ட தமிழ்க் கலைத்துறையின் மறுமலர்ச்சியோடு, பாரம்பரியக் கலைவடிவங்களுக்கு புத்துயிர் அளிக்கும் எண்ணத்துடன், பல பிரதேசங்களில் மரபு வழி நாடகங்கள் உருவாக்கம் பெற்றன. அந்தவழியில் V.V.வைரமுத்துவை மையமாகக் கொண்டு உருவாக்கிய நாடகப் பாரம்பரியம் மிகமுக்கியமானது. அக்காலத்தில் அவருடன் சேர்ந்து பெண் பாத்திரத்தில் அரிச்சந்திரா நாடகத்தில் தொடங்கி பல்வேறு நாடகங்களில் நடித்து பெயர் பெற்றவர் அமரர் வி.கே.இரத்தினம் அவர்கள்.

வரலாற்றுக் காவிய நாடகங்களில் சிறப்புப் பெற்ற இவர் தனது பிறந்த ஊராகிய அரியாலையில் நடைபெறும் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாக்களில் அரச நாடகங்களான வசன நாடகங்களில் தவறாது நடித்து தனது பங்கை வகித்தவர். புகழ்பெற்ற நடிகர்களான அமரர்கள் E.K.குமரையா, I.S.சண்முகநாதன் ஆகியோருடன் பலவிழாக்களில் நடித்து தனது முத்திரையைப் பதித்தவராவார்.

இசைநாடகத்துறையில் தனது நடிப்பாற்றலையும் குரல்வளத்தினையும் பயன்படுத்திப் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் உள்ளத்தே நீங்காத இடத்தினைப்பதித்து இசைநாடக வளர்ச்சிக்கு தனது கணிசமான பங்கினை ஆற்றியவர். சுமார் 50 வருடகாலமாக, நடிப்புத்திறத்தினாலும், இளங்கலைஞர்களை உருவாக்கி நாடக வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தது மட்டுமல்லாமல், கட்டடக்கலையிலும் சிறந்த வல்லுநராவார். அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் ஸ்தாபக உறுப்பினராகவும் அந்நாடக சபாவின் தயாரிப்புக்களின் பாடலிசையமைப்பாளராகவும் செயற்பட்டு வந்தவர்.

காங்கேசன்துறை வசந்தகான நாடக சபாவின் அரிச்சந்திரா மயான காண்டத்தில் சந்திரமதியாக நடித்து, அதன்மூலம் "சந்திரமதி" இரத்தினம் என்ற பெயரினை ஸ்தாபித்துக் கொண்டவர். ஆயிரத்திற்கு மேற்பட்ட அரங்குகளைக் கண்ட இவரின் ஆற்றலைப் பல கலை நிறுவனங்கள் பட்டங்கள் அளித்துப் பாராட்டி உள்ளன. குறிப்பாக அரியாலையில் இவரின் ஆற்றுப்படுத்தலுடன், நடிகர் பி.சண்முகலிங்கம் அரிச்சந்திரனாகவும், இவர் சந்திரமதியாகவும் நடித்து அரங்கேறிய இசை நாடகம் ஒரு சாதனையை உருவாக்கியது. அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினர் இவருக்குத் தகுந்த கௌரவிப்பினை அளித்து, இவரின் இசை உருவாக்கத்தில் உருவாகிய "பண்டாரவன்னியன்" நாடகத்தை மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது. நாளும் ஸ்ரீ சரஸ்வதி ஆலயத்தினருகேயிருந்து தன் இசைத்திறனை விருத்தி செய்தமையும் மற்றோர்களை வழிநடத்தி சிறப்புற வாழ்ந்த, இவர் என்றும் நினைவில் நீங்காத இடம்பெறுகின்றார். அன்னாரின் வழித்தோன்றலாக திரு.செல்வம் போன்றோர் நாடகத்துறையில் அவர் விட்டுச்சென்ற இடத்திலிருந்து பின்தொடர்வது நாடக வம்ச விருத்தியின் சிறப்பாகும்.

அன்னாரினது மறைவால் துயருறும் குடும்பத்தாரும், நாடக இசைக்கலைஞர்களும் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் இந்நேரத்தில் நானும் அவர்களுடன் சேர்ந்து கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.

**செ.பத்மநாதன்**
*திட்டப் பணிப்பாளர், உலக வங்கி வீடமைப்புத் திட்டம், வடக்கு - கிழக்கு மாகாணம். முன்னாள் அரச அதிபர், யாழ்.மாவட்டம்.*

## இரத்தினம் இறப்பில்லா அரங்கம்

முத்தமிழில் முதன்மைவாய்ந்த கலை நாடகக் கலையாகும். மனிதனை முழுமையடையச் செய்யும் ஆற்றல் கொண்டது இக்கலை.

இந்நாடகக் கலையை வளர்த்தவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் தான் அமரர் வி.வி.வைரமுத்து அவர்கள். நாடகம் என்றதும் எம்மனக்கண்முன் நிற்பவை அமரர் வி.வி.அவர்களின் நாடகங்களே. அவரது நாடகங்களை பிரகாசிக்க வைத்தவர்தான் காலஞ்சென்ற கலைஞர் கலாபூஷணம் வி.கே.இரத்தினம் அவர்கள்.

அவரது குரலழகும், இசை ஞானமும், பிறப்பிலேயே அவரோடு இணைந்துவிட்டன.

பெண்களாலேயே பெண்பாத்திரத்தை சரிவர நடிக்க முடியாத நிலையில் இரத்தினம் அவர்கள் பெண்பாத்திரமேற்று பெண்ணுக்கான அபிநயம், நளினம், முகபாவங்களுடன் பெண்களே மெச்சும் வகையில் நடித்துக்காட்டியவர்.

ஊதியத்திற்காக அன்றி கலையை வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காக வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள். நடிப்பில் மட்டுமன்றி அவர் தன் வாழ்விலும், அன்புடனும், பண்புடனும் வாழ்ந்து காட்டியவர். அவரது இழப்பு தமிழ்நாடக உலகுக்கு பேரிழப்பாகும். பல அரங்குகள் கண்ட அவர் என்றும் இறப்பில்லா ஓர் அரங்கமே.

**சி.புவனேசமூர்த்தி,**
நிர்வாக உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச் சபை.



கலாபூதணம்
வே.க.இரத்தினம்

## அற்புதமான மனிதர்

அன்பர் இரத்தினம் அவர்களை நான் நீண்ட நாள்களாக அறிவேன். கலைவளர்ச்சிக்கு தன்னை முழுமையாகவே அர்ப்பணித்த அற்புதமான மனிதராவார். இசை நாடகத்துறையில் பல சகாப்தங்களாக தனக்கு தக்காரும் மிக்காருமின்றி தனி ஆதிக்கம் செலுத்திய நட்சத்திரமாவார்.

தான் எடுத்துக் கொண்ட பாத்திரத்தை உணர்ந்து அப்பாத்திரமாக தன்னை மாற்றிக்கொள்ளும் அறிவாற்றலும், உணர்திறனும், ஆற்றலும் கொண்ட நடிகனாகத்திகழ்ந்தார். அவருடைய நாடகங்களை விடிய விடிய இருந்து பார்த்து உணர்ச்சி வசப்படுபவர்களில் நானும் ஒருவன் . எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவர் அரிச்சந்திர மயான காண்டத்தில் சந்திரமதியாகத்தோன்றி பிள்ளைப்பாசத்தை எடுத்துக்காட்டிய விதம் மெய்சிலிர்க்க வைத்தது. நான் அவரின் ஒரு ரசிகன் என்பதில் பெருமைப்படுகிறேன்.

பல மேடைகளில் பல்லாயிரக்கணக்கான இரசிகர்களினால் புகழப்பட்ட அமரர் கலைஞர் இரத்தினம் அவர்களின் இழப்பு கலையுலகிற்குப் பேரிழப்பாகும். அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சு.மோகனதாஸ்,**
துணைவேந்தர்.

## கலை உலகில் கரைகண்ட கலை வேந்தன் சந்திரமதி இரத்தினம்

செந்தமிழ் தம் சிந்தனையில் கவர்ந்த பைந்தமிழ் காவியங்களில் சிந்தைக்கும் செவிக்கும் நல் விருந்தளிக்கின்ற நாடகக்கலையை நாடறியச்செய்த கலாபூசணம் இரத்தினம் அவர்களைப் பற்றிய சில வார்த்தைகள்

கலையுலகில் சந்திரமதி இரத்தினம் என அழைக்கப்பட்ட இவர் நடிகமணி வி.வி வைரமுத்துவின் அரிச்சந்திரமயான காண்டம் இசை நாடகத்தில் சந்திரமதி பாத்திரம் ஏற்று நடித்த தன் மூலம் நாடக உலகின் நம்பிக்கை நட்சத்திரமாகி பக்தநந்தனார், ஸ்ரீ வள்ளி போன்ற நாடகங்களால் கலைக்கே பெருமை சேர்த்திருந்தவர். கலை, கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே என்ற இலட்சியத்தில் நம்பிக்கைகொண்டவர். அதைத்தன் சமூகத்திலும், சூழலிலும், குடும்பத்திலும் ஊட்டி நல்ல வல்ல கலைஞர்களை உருவாக்க உரமாயிருந்தவர். அந்தவகையில் அவரது மகனாரும் எமது நிறுவனத்தின் பணியாளருமான சாரங்கா இசை இயக்குநர் இ.வதனவாசன் இன்றைய கலை உலகில் ஒரு பெறுமதியானவர். தந்தையின் இலட்சிய பயணத்தை தொடர்வார் என்ற நம்பிக்கையுடன் சாவடைந்த பின்னும் வாழும் வாழ்க்கைக்குரித்துடைய அந்த வரலாற்று பெருமகனின் குடும்பத்திற்கு எனதும் எனது நிறுவனம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபத்தையும், இறைசாந்தியையும் வேண்டி நிற்கின்றேன்.

**சொலமன் சூ.சிறில்**
*தலைவர், யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்.*

## மனிதனை மனிதனாக மதிப்பவர்

ஈழத்து இசைநாடகக் கலைஞர்கள் பலருடனும் இணைந்து நடிக்கும் வாய்ப்பு பெற்றிருந்த கலைஞர் இரத்தினம் அவர்கள் ஏனைய கலைஞர்களைத் தட்டிக்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தும் பண்பாளராகவும் விளங்கினார். பெண்பாத்திரங்களில் தொடர்ந்தும் நடிக்கமுடியாத நிலையை உடற்பருமனும் மூப்பும் ஏற்படுத்திய வேளை, தமது கிராமத்துப் பிள்ளைகளை இசைநாடகங்களில் பயிற்றுவித்து அவர்களைக் கொண்டே கலை நாடகங்களை மேடையேற்றியும், அந்நாடகங்களில் குணச்சித்திர பாத்திரங்களை ஏற்றும் இசைநாடக உலகுக்கு தனது பங்களிப்பினை இடையறாது வழங்கியும் வந்தார்.

ஈழத்தின் பல்வேறு அமைப்புக்களாலும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர் இரத்தினம் அவர்கள் தமது அந்திம காலம் வரை பாரம்பரிய கலைகளில் நாட்டம் மிக்கவராகவும் அக்கலைகள் இடம்பெறும் இடங்களுக்குச் சென்று அக்கலைகளை ரசித்து, கலைஞர்களைப் பாராட்டி வருபவராகவும் விளங்கினார். கலையின் முதல் வரைவிலக்கணமே அது மனிதனால் படைக்கப்படுவது என்ற வகையில், மனித வாழ்வியலை முதன்மைப் படுத்தி ஆடப்பட்டு வந்த இசைநாடக அரங்கில் ஆழந்த ஈடுபாடு கொண்டு உழைத்து வந்த கலைஞர் இரத்தினம் அவர்கள் மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு மிக்கவராக விளங்கியமை அவர் நாடகத்தின் நோக்கம் குறித்த விளக்கத்தைக் கொண்டிருந்தார் என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

**கலாநிதி த.கலாமணி,**
*சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.*

(36561)(50)

## ஒரு கலைஞனின் இழப்பில் இல்லாமற் போனவர் பலர்

"சோகசோபித சொர்ணக் கவிக்குயில்"
பாடிப் பறந்தது
அது இருந்து பாடிய மரங்கள் யாவும்
காற்றில் அசையாது உறைய
இலைகளில் வழிகிறது கண்ணீர்
ஒவ்வொன்றாய் உதிர்ந்து சொரிய
இறுதியாய் இருந்தது ஒரு பூ
அதுவும் இல்லையென்றானது இன்று
லோகிதாசனை எரிக்கவென இரந்து
மயானத் தரசனிடம் மண்டியிட்ட சந்திரமதியையும்
முழத்துண்டும்
காற்பணமுமில்லாது
வெறும் வாய்க்கரிசியுடன் தீயிட்டுத் திரும்பியாயிற்று
இனிச் சந்திரமதியை எங்கு தேடுவது?
எவரில் காண்பது?
எமக்கென இருந்த அரங்கு வெறிச்சோட
யாருமற்றுப் போனது கோயில் வெளி
சந்திரமதியும்
சாவித்திரியும்
அழகவல்லியும் ஆரியமாலாவும்
உயிர்ப்புற்றுலவிய உடலைத் தொலைத்தோம்
மாயாவிந்தையென
பெண்புகுந்த ஆணாய் உலவிய கலைஞன்
கைதவறிப் போனான்
பாமா விஜயத்தையும்
பக்த பிரகலாதனையும்
இனி எவர் ஆடுவது?
எவர் நாடுவது?
'சந்திரமதி இரத்தினம்'
ஆடியதையும் பாடியதையும் பார்த்துச் சிலிர்த்ததும்
அழுவதைப் பார்த்து அழுததும்
சின்னவயதின் சேமிப்பாய்க் கிடக்கிறது இன்னும் நெஞ்சில்
"யாரடி கள்ளி" யென்று வைரமுத்தண்ணர் வந்து விரட்ட
இரத்தினமண்ணர் பாடத் தொடங்குவார்.
சோகம் தெளிக்கும் இராகம் பரவி
விழிகனத்துச் சொரியும் கண்ணீரால்
ஊர்கூடிய வயல்வெளி ஈரமாகும்
அரியாலை இரத்தினம்
நல்ல நடிகன் மட்டுமல்ல
நல்ல மனிதனும் கூட
எனக்கும் அவருக்குமான உறவு
வலியது
அவர் கட்டிய வீடுகளின் அத்திவாரங்கள் போல
காணும் பொழுதுகளில் கண்ணில் சிரித்து
நெஞ்சால் பேசி
என்னில் இறங்கிய கலைஞனிவன்
"வா ஐயா" என்று வாஞ்சையுடன் அழைக்கும்
'சந்திரமதி'யைச் சாவுக்குக் கொடுத்துத் தனியனானேன்
இனியொருவர் இல்லையென்றாக
நாடகமேடையைத் திரைமூட இருள் கவிந்தது
இரத்தினமண்ணர்
என்னே மனிதன் !
என்னே கலைஞன்!
என்னே அற்புத அழகன்!
சந்திரமதி இரத்தினமென்ற
ஒற்றையொரு கலைஞனின் சாவில்
சந்திரமதி
சாவித்திரி
கண்ணகி
ஞானசௌந்தரி
நல்லதங்காள்
பவளக்கொடி
பாமா, ருக்மணியென
எத்தனைபேர் இல்லாமற்போய்விட்டனர்
எத்தனைபேர் தனித்துக் கிடக்கிறோம்
நிரப்பமுடியாத இடைவெளி வைத்துப்போனாய்
ஒருவரில்லைஉன்னிடத்தை ஈடுசெய்ய
விடைதந்தோம்
சாவுக்குப் பின்னும் வாழ்வாய் 'சந்திரமதி'
அரிச்சந்திரனைக் காண்பாய் அல்லவா?
சுகம் கேட்டதாய்ச் சொல்லவும்
பிரிந்தோம் மீண்டும் சந்திப்போம்
சந்திக்கவேண்டும் அண்ணனே!
போய்வருக.

**- புதுவை இரத்தினதுரை**

## தாய் மண்ணுக்கும் தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை தேடித்தந்த அருங்கலைஞர்

கலாநிதி நடிகமணி வி.வி. வைரமுத்துவிற்கு ஈடு கொடுத்து எவ்விதமான சோகையும் இல்லாது பல்லாயிரக்கணக்கான மேடையில் முதலில் பெண் பாத்திரமேற்று நடித்த இரத்தினம் அவர்கள் மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப்பெற்ற கலாநிதி வி.வி வைரமுத்துவின் வளர்ச்சிக்கும் இசைநாடக வரலாற்றின் வளர்ச்சிக்கு அத்திவாரமிட மூலகாரணமாக இருந்தார்.இசைநாடக வளர்ச்சிக்கு பல பெண்கள் கதாநாயகிகளாக நடித்திருந்தாலும் அமரர் இரத்தினம் அவர்கள் உடலால் ஆணாக இருந்தாலும் ஒப்பனையால் பெண்ணாகி நடிப்பு, சுருதி, தாளம் தவறாத பாட்டினால் உண்மையான பெண்களையும் விட ஒரு படி உயர்த்த ஒப்பற்ற கலைஞராகவே இருந்துள்ளார் என்பது வரலாறாகும். இது எமது மண்ணுக்கும் அவர்பிறந்த அரியாலையூர் மண்ணுக்கும் கிடைத்த பெருமையாகும்.

இறுதி மூச்சுவரை கலைஞராக வாழ்ந்த அப்பெரியாரின் மறைவு அவர்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல எங்கள் கலைப்பணி செய்யும் அத்தனை பேருக்கும் ஆழ்ந்த துயரை தந்துள்ள வேளையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**செல்லையா மெற்றாஸ் மயில் . கலாபூஷணம்.**

# இன ஒற்றுமைக்கு வேட்டு வைத்த தனிச் சிங்களச் சட்டம்

'பதவியேற்ற 24 மணித்தியாலங்களில் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குவேன்' என்ற கோஷத்துடன் ஆட்சியைப் பிடித்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க. அவர் ஆட்சிபீடமேற பிக்குகளும் தோள் கொடுத்தனர். தனிச்சிங்கள மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது "ஒரு மொழி இரண்டு நாடு இரண்டு மொழி ஒரு நாடு" என்று எதிர்காலத்தை விவரித்தார் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா. அதுவே, இன்று நிஜமாகியுள்ளது. தனிச் சிங்கள மொழிச் சட்டம் 49 வருடங்களுக்கு முன் இதே திகதியில் நிறைவேற்றப்பட்டது. அது சம்பந்தமான விவரங்களைக் கட்டுரையில் படியுங்கள்.

**1948**ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்தது. பொதுத் தேர்தலும் நடைபெற்றது. டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான அரசு அமைக்கப்பட்டது. அந்த அரசில் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜி.ஜி.பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் ஆகியோர் அமைச்சர்களாயிருந்தனர். சுதந்திரமடைந்த கையோடு ஆளும் கட்சியினரிடையே வகுப்புவாத உணர்வு தலைதூக்கத் தொடங்கியது. தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்கில் அரசு 1949 ஆம் ஆண்டில் இந்திய - பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன் பயனாக மலையகப் பகுதிகளில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தமிழ் பிரதிநிதிகள் தெரிவாவது தடைப்பட்டது. அரசின் உள்நோக்கத்தை புரிந்துகொண்ட எஸ்.ஜே.வி.செல்வநாயகம், வன்னியசிங்கம் ஆகியோர் தமிழ்க் காங்கிரஸில் இருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். ஆனால், ஜி.ஜி.பொன்னம்பலம் மற்றும் சி.சுந்தரலிங்கம் ஆகியோர் தொடர்ந்து அமைச்சர் பதவிகளை வகித்தனர்.

அதேநேரம், விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க மின்னேரியா, மினிபே மற்றும் கல்லோயா பிரதேசங்களில் பாரிய குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி அங்கு சிங்களவர்களைக் குடியேற்றினார். இதனால், தமிழர் தாயகப் பிரதேசங்கள் பறிபோக ஆரம்பித்தன. அப்போதும் எம்மவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகித்தனர்.

### ஐ.தே.கவில் பிளவு

1956ஆம் ஆண்டுவரை குடியேற்றத் திட்டங்கள் மற்றும் இந்திய - பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டம் ஆகியன தமிழ் மக்களுக்கு எதிராக அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

சுதந்திரத்தை அடுத்து ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. அரசு மிகவும் சக்திமிக்க ஒன்றாக விளங்கியது. அந்த அரசில் சுகாதார மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க பதவி வகித்தார். தனக்குப் பின்னர் தனது மகன் டட்லி சேனநாயக்கவே பிரதமராக வரவேண்டும் என்று டி.எஸ்.சேனநாயக்க திட்டமிட்டார். அதற்கான திட்டங்களை அவர் தயாரித்திருந்தார். ஆனால், அமைச்சரவையில் அங்கம் வகித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க உலகில் தலைசிறந்த பேச்சாளராக விளங்கினார். உண்மையில் ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் அடுத்த பிரதமர் பதவிக்கு பண்டாரநாயக்கவே சகல விதத்திலும் தகுதியானவர் என்று பெரும்பாலானவர்கள் நம்பினர். ஆனால், பிரதமர் டி.எஸ்.சேனநாயககவின் திட்டப்படி பண்டாரநாயக்கவுக்கு ஐ.தே.கட்சி அரசில் பிரதமராவதற்கு வாய்ப்புகள் இல்லை. இதைப் புரிந்துகொண்ட பண்டாரநாயக்க ஐ.தே. கட்சியிலிருந்து பிரிந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். இருப்பினும் பலம்மிக்க ஐ.தே.கட்சியை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது சுலபமாக இருக்கவில்லை. எவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றலாம் எனச் சிந்தித்த பண்டாரநாயக்க தான் படித்த சித்தாந்தங்களை எல்லாம் மறந்துவிட்டு வகுப்புவாதத்தைத் தேர்ந்தெடுத்தார்.

### 24 மணி நேரத்தில் சிங்களம்

1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலுக்கான தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டார். தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்திற்குள் சிங்களம் இந்நாட்டின் ஆட்சி மொழியாக்கப்படும் என்று அதில் அவர் வாக்குறுதியளித்தார். இதற்கு சிங்களவர்களில் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்தனர். குறிப்பாகப் பௌத்த பிக்குகள் களத்தில் இறங்கி பண்டாரநாயக்கவின் வெற்றிக்காக உழைத்தனர். சிங்களத்தை அரசமொழியாக்குவது என்ற தீவிர பிரசாரத்தாலும் பௌத்தபிக்குகளின் ஒட்டுமொத்த ஆதரவாலும் ஐ.தே.கட்சியைப் படுதோல்வியடையச் செய்து பண்டாரநாயக்க ஆட்சியைக் கைப்பற்றினார்.

அப்போது இலங்கை நாடாளுமன்றம் 95 ஆசனங்களைக் கொண்டிருந்தது. அவற்றில் பண்டாரநாயக்கவின் கட்சி 51 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. ஐ.தே.கட்சிக்கு 8 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. 14 உறுப்பினர்களுடன் லங்கா சமஜமாஜக் கட்சி எதிர்க்கட்சியானது. வடக்கு - கிழக்கில் தமிழரசுக் கட்சி 10 ஆசனங்களைப் பெற்றது.

பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றி 22.04.1956 அன்று அமைச்சரவை அமைத்த பண்டாரநாயக்காவால்தான் கூறியபடி 24 மணி நேரத்திற்குள் சிங்களத்தை அரச மொழியாக்க முடியவில்லை. முடிவில் 54 நாள்கள் கழித்து 15.06.1956 அன்று நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.


### அன்று நடந்தது...

இன்றைக்குச் சரியாக 49 ஆண்டுகளுக்கு முன்னர் இதேமாதம் 5ஆம் திகதி (05.06.1956) காலை 9 மணியளவில் அப்போதைய நாடாளுமன்றக் கட்டடம் அமைந்திருந்த காலிமுகத் திடலில் மக்கள் கூடினர். அன்றுதான் சிங்களத்தை அரச மொழியாக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. அதற்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்திலேயே சிங்கள மக்கள் அங்கு திரண்டனர்.

அதே நேரம் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் காலி முகத்திடலின் மத்தியில் தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து நிலத்தில் அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். சுமார் 200 பேர் அடங்கிய இக்குழுவில் தமிழரசுக் கட்சித் தலைவர்களான எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சீ.வன்னியசிங்கம், ஏ.அமிர்தலிங்கம், வீ.ஏ.அழகக்கோன் ஆகியோரும் இருந்தனர்.

தனிச்சிங்கள மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகில் கூடிய பெரும்பான்மை இனத்தவர்கள் காலி முகத்திடலின் மத்தியை நோக்கி நடந்து சென்று சத்தியாக்கிரகங்களைச் சுற்றி வளைத்தனர். தமிழ் மக்களுக்கு எதிராகக் கூக்குரலிட்டனர். பொலீஸாரால் அவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. பொலீஸார் பார்த்துக்கொண்டிருக்கையில் சிங்களக் காடையர்கள் சத்தியாக்கிரகிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். சத்தியாக்கிரகிகள் சத்தியாக்கிரகத்தை தொடர முற்பட்ட போதிலும் நிலைமை மிகமோசமானதை அடுத்து பொலீஸாரின் வற்புறுத்தலையடுத்து பி.ப. 1.15 மணி அளவில் இந்தச சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது.

அவ்வேளையில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 30 பேர் காயமடைந்திருந்தனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் காயமடையாத உறுப்பினர் மன்னார் உறுப்பினரானா வீ.ஏ.அழகக்கோன் மட்டுமே ஆவார். இவர் இலங்கையரைப் போல் அல்லாது வெள்ளைக்காரரை ஒத்த வெள்ளை நிறத்தைக் கொண்டவர் என்பதால் காடையர்கள் அவரை வெள்ளைக்காரன் என நினைத்து அவர்மீது தாக்குதலை மேற்கொள்ளவில்லை.



சிங்களம் மட்டும் சட்டத்தின் பிரதிக்குத் தீயிடும் தமிழ்த் தலைவர்கள்.

சத்தியாக் கிரகிகள் பொலீஸ் வாகனங்களில் ஏற்றப்பட்டு பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலுக்குக் கொண்டுசென்று இறக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்துக் கேள்விப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தின் முற்பகுதியில் அமைந்திருந்த படிக்கட்டிற்கு வந்து கூடியிருந்த ஆதரவாளர்களை நோக்கி உரையாற்றினார். ஆதரவாளர்களை அமைதிபேணும்படி கோரினார். தமிழ்க் கட்சிகளின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை தான் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், இருப்பினும் சத்தியாக்கிரகிகள் மீது எதுவித தாக்குதல்களையும் மேற்கொள்ளவேண்டாம் எனவும் தெரிவித்தார். கலவரங்கள் தொடர்ந்தால் சிங்களமொழி மசோதாவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படக் கூடும் எனவும் அதற்காகத் தனக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்தில் அமைதி பேணுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து அங்கு கூடியிருந்தவர்கள் கலைந்தனர்.

### இனக்கலவரம்

இதேவேளை -

தமிழ்க் கட்சிகளின் சத்தியாக்கிரகத்திற்கு எதிர்புத் தெரிவிக்கும் விதத்தில் பௌத்த பிக்குகள் நாடாளுமன்றத்தை நோக்கி ஊர்வலமாக வந்துகொண்டிருந்தனர். களனி ரஜமகா விகாரை பிரதம பௌத்த பிக்கு மாபிட்டிகம புத்திரகித்த தேரரின் தலையீட்டையடுத்து பௌத்த பிக்குகளின் ஊர்வலம் இடைநடுவில் கலைந்தது. (பிரதமர் பண்டாரநாயக்கவுக்கு வலதுகரமாக விளங்கிய மாபிடடிகம புத்திரகித்த தேரர் பின்னர், பிரதமர் பண்டாரநாயக்கவின் படுகொலையில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டார்).



பிலிப் குணவர்த்தன



எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா



சர்.ஜோன் கொத்தலாவல



ஜி.ஜி.பொன்னம்பலம்



கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா



அ.அமிர்தலிங்கம்

பிரதமர் பண்டாரநாயக்கவின் வேண்டுகோளை அடுத்து நாடாளுமன்றப் பகுதியிலிருந்து கலைந்து சென்ற சிங்களவர்கள் புறக்கோட்டை 5ஆம் குறுக்குத்தெரு, செட்டியார் தெரு, பமபலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, மருதானைப் பகுதிகளில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளைச் சேதமாக்கினர். இவர்களைக் கலைக்க பொலீஸார் கண்ணீர் புகைக்குண்டுகளைப் பிரயோகித்தும் பயனளிக்காத நிலையில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இந்தக் குழப்பத்தின் போது காயமடைந்த 48 பேர் கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். 150 பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அன்றையதினம் பிற்பகல் 2 மணியளவில் நாடாளுமன்ற பார்வையாளர் கூடம் மூடப்பட்டது. நாடாளு மன்றத்தை அண்டிய பகுதி எங்கும் பலத்த பாதுகாப்புப் போடபபட்டது. பிரதமர் பண்டாரநாயக்கவால் "சிங்களம் மட்டும்" மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விவாதத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் கலந்துகொண்டு பேசுகையில்:-

இந்த மசோதா குறித்துத் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். அரசமைப்பின் 29ஆவது சரத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு வழங்கபபட்டுள்ள பாதுகாப்பை இந்த மசோதா மீறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் மற்றும் வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் கருத்துகளை ஆதரித்து தனிச்சிங்களச் சட்ட மசோதாவிற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அ.அமிர்தலிங்கம் உரையாற்றும்போது அன்று காலையில் சத்தியாக்கிரகத்தின்போது காடையர்களால் தாக்கப்பட்ட அவரது தலைக்காயத்துக்கு போடப்பட்ட கட்டிலிருந்து இரத்தம் கசிந்த வண்ணமிருந்தது.

அன்றையதினமே மசோதாவின் 2 ஆவது வாசிப்பைப் பிரதமர் பண்டாரநாயக்க ஆரம்பித்து வைத்தார்.

### குடாநாட்டில் ஹர்த்தால்

இதற்கிடையில் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு பகுதிகளில் ஜூன் 5ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியினரால் சத்தியாக்கிரகம் ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பகுதிகளிலுள்ள அரச பணிமனைகள், பாடசாலைகள், கடைகள் என்பன மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டன.

அடுத்தநாள் அதாவது ஜூன் 6ஆம் திகதியும் கொழுமபு நகரில் தமிழ் மக்களுக்கு எதிரான பல வன்செயல்கள் இடம்பெற்றன. தமிழ் அரச ஊழியர்கள் பலர் தாக்கப்பட்டனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா பகுதியில் கலவரம் உக்கிரமடைந்தது. குடியேற்றத் திட்டங்களில் வாழும் சிங்கள மக்களைத் தாகக பெரும் எண்ணிக்கையிலான தமிழர் கள் வருகிறார்கள் என வதந்தி பரவவே அங்குள்ள சிங்களவர்கள் அரச வாகனங்களில் ஏறி தென்பகுதிக்குச் சென்றனர். ஒருபுறம் சிங்களவர்கள் தப்பியோட அங்கிருந்த சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே மோதல்கள் உருவாகி பலர் கொல்லப்பட்டனர்.

அம்பாறையில் நிலைமையை சுமுகமாக்க அமைச்சர்களான சி.பி.டி.சில்வா, தஹநாயகா ஆகியோர் அடங்கிய குழுவை பிரதமர் அனுப்பி வைத்தார். (1958ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தின்போது இந்த இரு அமைச்சர்களும் முக்கிய பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது).

மொழிப் பிரச்சினை தொடர்பாக 1955ஆம் ஆண்டின் மத்தியில் சிங்கள மக்களிடையே புத்துணர்வு ஏற்பட்டது. 1955இல் அப்போதைய பிரதமர் சேர்.ஜோன்.கொத்தலாவல யாழ். குடாநாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். நெடுந்தீவுக்கு அவர் மேற்கொண்ட விஜயத்தின்போது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கு சம அந்தஸ்து வழங்கும் விதத்தில் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்த கருத்தானது தென்பகுதி சிங்கள மக்களிடையே உணர்வலையை உருவாக்கியது. சிங்களமொழி ஆர்வலர்களும் பௌத்த பிக்குகளும் கூட்டங்களையும் கூட்டி சேர்.ஜோன்.கொதலாவலையின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதற்கிடையில் சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி என்.எம் பெரேரா 1955ஆம் ஆணடு ஒக்டோபர் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையைத் தாக்கல்செய்தார். அந்தப் பிரேரணையில் சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுவும் சிங்களவர்கள் மத்தியில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைந்தது.

### ஐ.தே.க.ஆதரவு

நாட்டில் உருவாகிவரும் உணர்வலைகளை அதாவது சிங்களத்தை அரச மொழியாக்குவது தொடர்பாக சிங்கள மக்களிடையே உருவாகி வரும் ஆர்வத்தை மனதிற்கொண்ட ஐ.தே.கட்சி தானும் அவ்வழி செல்வது என முடிவெடுத்தது.

### களனி

களனியில் நடைபெற்ற ஐ.தே.கட்சியின் 8ஆவது வருடாந்த மாநாட்டில் சிங்களம் மட்டும் நாட்டின் அரசகரும மொழியாக்கப்படவேண்டும் என்ற பிரேரணை முன்வைக்கப்பட்டு ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேர்தலுக்காக பண்டாரநாயக்கவால் அமைக்கப்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணியில் பிலிப் குணவர்த்தனாவின் புரட்சிகர சமசமாஜக் கட்சி, டபிள்யூ தகநாயக்காவின் மொழி முன்னணி (பாஷா பெரமுன) சுயேட்சை உறுப்பினர்களான ஐ.எம்.ஆர்.ஏ.ஈரியகொல்ல, மஹாநாம சமரவீர ஆகியோரும் மற்றும் சில அமைப்புகளும் இடம்பெற்றன. இவை அனைத்தும் ஒன்றுகூடி 1956 பெப்ரவரி 21ஆம் திகதி ம.ஐ.முன்னணியை அமைத்தன.

சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்குவது, பௌத்த மதத்திற்கு உரிய இடம் அளிப்பது உட்பட 21 அம்சங்களை உள்ளடக்கி ம.ஐ.முன்னணி அமைக்கப்பட்டது. சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதை முன்வைத்து நாடெங்கும் பிரசாரத்தை மேற்கொண்ட இந்த முன்னணி 1956 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 96 ஆசனங்களில் 51 ஆசனங்களைக் கைப்பற்றியது.

தேர்தல் பிரசாரத்தின்போது தமது முன்னணி, ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்திற்குள் சிங்களத்தை அரசாங்க மொழியாக்குவேன் என பண்டாரநாயக்க வாக்குறுதியளித்தார். ஆனால், ஆட்சிக்கு வந்து மொழிச் சட்டத்தை நிறைவேற்ற அவருக்கு 54 நாள்கள் தேவைப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1948 - 05 - 24

மறைவு
2004 - 06 - 25

அமரர்
கந்தையா அமிர்தலிங்கம்

(முகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி, ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)

திதி: 15 -06-2005

பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய்
வாழ்வில் நல்வழிகாட்டி
ஒளியூட்டி எம்மை
வாழ வைத்த தெய்வமே!
ஒன்றல்ல ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் புன்னகை
பூத்த திருவதனம்
அழியாத கோலமாய் – எங்கள்
மனதில் கலந்திருக்கும்.

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(36555) (24-18-19)

V.C. லேன், கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

அன்பு மனைவி, குடும்பத்தினர்.

## வீதி சேதம்

குருநகர்,ஜுன்15

யாழ். கோவில் வீதி லூட்ஸ் கன்னியர் மடத்தின் முன்பாக பல இடங்களில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இவ் வீதியை உடன் திருத்தியமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் இந்த வீதியூடாகப் பயணிப்போர் தெரிவித்தனர். (ஒ-51)

## பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி,ஜுன்15

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அலுமினிய வேலைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை விரைவில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையினை யாழ். கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகம் நடத்தவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் உள்ளூராட்சி சபைகளில் தலா ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பங்குபற்ற வேண்டுமெனவும், அவ் உத்தியோகத்தர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறும் சகல உள்ளூராட்சி சபைச் செயலாளர்களுக்கும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (8-117)

## ஆக்கப்பொருள் கண்காட்சி

தென்மராட்சி,ஜுன்15

கைதடி - நாவற்குழி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் ஆக்கப் பொருள் கல்விக் கண்காட்சி இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியினைச் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் ஆரம்பித்து வைப்பார். ([illegible]-117)

# 31ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
1932 - 02 - 28

மறைவு
2005 - 05 - 17

அமரர் செகநாதர் வயிரமுத்து

**அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்து ஆளாக்கிய உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

கடந்த 17-05-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் செகநாதர் வயிரமுத்துவின் சபிண்டீகரணக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் வாகன உதவி செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடத்தனை மேற்கு,
குடத்தனை.

பரஞ்சோதி முத்து (மனைவி), ஜெகதீசன் குடும்பம், பவானந்தன் குடும்பம் (ஜேர்மனி), கமலலோசனி குடும்பம் (ஜேர்மனி), லோகேஸ்வரன் (இந்தியா), தர்சினி (யா/கல்வியியற் கல்லூரி, 4ஆம் அணி ஆசிரியர்).

(சி/43408) (24-18-19)

# மரண அறிவித்தல்



## கிறகோலி அந்தோனிப்பிள்ளை (துரை)

பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறகோலி அந்தோனிப்பிள்ளை (துரை) 11.06.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறகோலி - மரியம்மா தம்பதியினரின் புத்திரனும் செல்லக்கிளியின் அன்புக் கணவரும் ஜான்சி (France), றொபின் பவானி, சூரி (France), நிலா (Germany), இதையா, துகிலன் (France) ஆகியோர்து பாசமிகு தந்தையும் ஜோசவ் (France), கலிஸ்ரா, அன்ரனி, டினற்ரா (France), எல்பேட் (Germany) ஆகியோரின் அன்பு மாமனும் ஜொபித்தா (France), றொகான், றொகான் சியா, ரெபேக்கா (Germany), அபிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-06-2005) புதன் கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.161/5, ஈச்சமோட்டை,*
*கடற்கரை வீதி,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
செல்லக்கிளி (மனைவி).

(36549) (32-18-19-24)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

## திருமதி சிங்கராசா புஸ்பராணி



(யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)

தோற்றம்
13-07-1952

மறைவு
16-05-2005

**முத்தெனப் பெற்ற மகளொடு கணவரும் துடிக்க – நீ!
இச்சகம் விட்டு முப்பத்தொருநாள் ஆனதோ இன்று
இத்தனை அவசரம் ஏனம்மா? இங்கு எம்மைவிட்டு
நித்தியப் பெருவாழ்வு பெற்றிட பரமனைப் பணிகின்றோம்.**

எம்மை ஆழாத் துயரிலாழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவியின் திடீர் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து அனுதாபம், அஞ்சலி, ஆறுதல் தெரிவித்து மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் அவர் நோயுற்று இருந்தவேளையில் உதவிகள், ஒத்த [illegible]சைகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (15-06-2005) புதன்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(சி/43404) (24-18-19)

**கணவர், மகள்,
சகோதரர்கள் குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயோடு : 26.05.1950
தீயோடு : 16.05.2005



சேவையினைச் சொத்தாக்கி சிரிப்பைச் சிறப்பாக்கி
சேர்ந்திருந்த எம்மையெல்லாம் பிரிவால் பித்தாக்கி
ஒருவழிப்பாதையிலே ஓடி மறைந்து விட்டீர்
ஓடித்திரிந்த காலும் ஓயாமல் பேசிக்கழித்தநாவும்
ஓய்ந்துவிட்டாலென்ன ஓயாது உம்மோடு – நாம்
கூடிக்களித்த நாள்கள். கரம்குவித்து உம் பெயர்
கூவித்தொழுகின்றோம் மலர் முகத்தை மனதில் நிறுத்தி !

அமரர் நகுலேஸ்வரி குகேந்திரன் [பிறேமா]

இல.6, சந்தானமாதா கோயில் ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

([illegible])

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணப் போட்டிகள் வவுனியாவில்

## அடுத்த மாதம் 16ஆம் திகதி முதல்

முல்லைத்தீவு,ஜூன்15

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட தடகளப் போட்டிகள் அடுத்த மாதம் 16ஆம் திகதி முதல் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஜூலை 16ஆம், 17ஆம் திகதிகளில் பெண்களுக்கான தடகளப் போட்டிகளும் 22ஆம், 24ஆம் திகதிகளில் ஆண்களுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, மாகாண மட்ட பெரு விளையாட்டுகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வவுனியாவில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பெரு விளையாட்டுகள் இடம்பெறும் திகதிகள் பற்றிய விவரம் வருமாறு:-

8ஆம் திகதி 15 வயது, 17 வயது மற்றும் 19 வயதுப் பிரிவினர்களுக்கான வலைப்பந்தாட்டமும் -

9ஆம், 10ஆம் திகதிகளில் 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான எல்லே, 19 வயது ஆண் - பெண்களுக்கான பூப்பந்தாட்டம், 15 வயது, 19 வயது ஆண் -பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் மற்றும் சதுரங்கம், 19 வயது ஆண் - பெண்களுக்கான கூடைபந்தாட்டம் என்பனவும் -

11ஆம் திகதி 15வயது,17வயது மற்றும் 19வயது பெண்களுக்கான கரபந்தாட்டமும்-

12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் 19 வயதுப் பெண்களுக்கான கபடி, ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட்டும் -

15ஆம், 16ஆம் திகதிகளில் 15 வயது, 17 வயது மற்றும் 19 வயது ஆண்களுக்கான கரபந்தாட்டமும் 17ஆம் திகதி ஆண்களுக்கான எல்லேயும் 18ஆம் திகதி உதைபந்தாட்டமும் 19ஆம் திகதி ஆண்களுக்கான கபடியும் இடம்பெறவுள்ளன. (3-410)

## தீவகத்தில் வேணுகோபால் நினைவு மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஜூன்15

தீவகக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்து, மறைந்த அமரர் வேணுகோபால் ஞாபகார்த்தமாக தீவகக் கல்வி வலயத்தினரால் இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு மென்பந்து கிரிக்கெட் போட்டி நடத்தப்படவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 9 மணி - வேலணை பிரதேச சபை அணி எதிர் வேலணைக் கல்விக் கோட்ட அணி.

★ பிற்பகல் 1.30 மணி - ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்ட அணி எதிர் நெடுந்தீவுக் கல்விக் கோட்ட அணி. (3-203)



அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ்.வை.எம்.சீயினரால் நடத்தப்பட்ட நான்கு முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டியின் 'இசைவும் அசைவும்' நிகழ்வில் கலந்துகொண்ட சிறார்களைப் படத்தில் காணலாம். (சு-190)

## யாழ்.பல்கலை உதைபந்தாட்ட அணியை போட்டிகளில் ஏற்பதில்லை என முடிவு

வலி.வடக்கு,ஜூன்15

யாழ்.பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியை ஒருவருட காலத்துக்கு போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிப்பதில்லை

### விளையாட்டு

என்று யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகள் முடிவுசெய்துள்ளன.

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் விளையாடிய இவ் அணியினர் மத்தியஸ்தரின் தீர்ப்பை மதித்து விளையாடாமையையிட்டே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான உதைபந்தாட்ட ரசிகர்கள் பார்வையாளர்களாகக் கூடியிருந்த இப்போட்டியில், பல்கலைக்கழக அணியினர் தொடர்ந்து விளையாடாது இடையில் வெளியேறினார்கள். இதையடுத்தே லீக்குகள் இந்த முடிவை எடுத்துள்ளன. (3-86)



நெதர்லாந்திலுள்ள எம்மன் நகரில் நடந்த 20 வயதிற்குட்பட்டோருக்கான சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில், பிரேஸில் வீரர் தியகோ குயிரீனோவின் கோல் முயற்சியை தாவிச்சென்று தடுக்கிறார் நைஜீரிய கோல் காப்பாளர் அம்புரோஸ். இப்போட்டி இரு அணிகளும் கோல் அடிக்காததால் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

## கிரிக்கெட் சூதாட்டத்தில் தொடர்பா? மார்க் வாவ் தரப்பு மறுக்கிறது

கிரிக்கெட் சூதாட்டக்காரர் ஷோபன் மேத்தாவுக்கும் மார்க்வாவுக்கும் சம்பந்தமே இல்லை என மார்க்வாவின் அலுவலகச் செயலாளர் லியோ காரில் கூறியுள்ளார்.

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தியாவைச் சேர்ந்த ஷோபன் மேத்தா குஜராத் பொலீஸாரால் சமீபத்தில் கைதுசெய்யப்பட்டார். இவரிடம் நடத்திய விசாரணையில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின. இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் முகமது அசாருதீன், நயன்மோங்கியா, அஜய் ஜடேஜா, ஆஸ்திரேலிய வீரர் மார்க் வாவ், தென்னாபிரிக்க வீரர் ஹான்சி குரோனியே உட்பட பலருக்கும் சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாக மேத்தா கூறினார். இதற்கு நயன் மோங்கியா, அஸாருதீன் இருவரும் மறுப்புத் தெரிவித்தனர்.

தற்போது மார்க் வாவ் தரப்பிலும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது அலுவலகச் செயலாளர் லியோ காரிஸ் கூறுகையில், 'ஷோபன் மேத்தா யாரென்றே மார்க் வாவுக்குத் தெரியாது. அவரைப் பார்த்தது கூட இல்லை. பேசியதும் இல்லை. அவருடன் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக புகார் கூறுவது வடிகட்டிய பொய்' - என்றார்.

1995ஆம் ஆண்டு நடந்த போட்டி ஒன்றில் மைதான அமைப்பு மற்றும் வானிலை குறித்து இந்திய சூதாட்டக்காரருக்குத் தகவல் அளித்ததாக மார்க் வாவ் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இது நிரூபிக்கப்பட்ட நிலையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு மார்க் வாவ் சுமார் 6 லட்சம் ரூபா அபராதம் செலுத்தினார்.

## ஷரபோவா வெற்றி

கிளாசிக் டென்னிஸ் தொடரில் மரியா ஷரபோவா சம்பியன் பட்டம் வென்றார்.

பிரிட்டனின் பர்மிங்ஹாம் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற கிளாசிக் டென்னிஸ் தொடர் நடந்தது. ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, செர்பியாவின் ஜெலீனா ஜன்கோவிக்கை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை ஷரபோவா கைப்பற்றினார். பின்னர் இரண்டாவது செட்டில் ஜன்கோவிக் வெற்றிபெற ஆட்டத்தில் விறுவிறுப்புக் கூடியது. முக்கியமான மூன்றாவது செட்டில் அபாரமாக ஆடிய ஷரபோவா எளிதில் ஜன்கோவிக்கை வீழ்த்தினார். இறுதியில் இவர் 6:2, 4:6, 6:1 என்ற செட்களில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் கைப்பற்றினார். புல் தரை மைதானத்தில் ஷரபோவா கைப்பற்றும் 10ஆவது சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## சதுரங்கத்தில் ஆனந்த் சம்பியன்

லியோன் சதுரங்கத் தொடரில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் சம்பியன் பட்டம் வென்றார்.

ஸ்பெயின் லியோன் நகரில் இத்தொடர் நடந்தது. இறுதிப்போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீரரான ஆனந்த், உஸ்பெகிஸ்தானின் ரஸ்தம் கசிம்ஷினோவை எதிர்த்து விளையாடினார். மொத்தம் நான்கு சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில், ஆனந்த் முதல் சுற்றில் தோல்வியடைந்தார். பின்னர் சுதாகரித்து ஆடிய அவர், இரண்டாவது சுற்றில் வெற்றிபெற்றார். மூன்றாவது சுற்றுப்போட்டி சமநிலையில் முடிந்தது. பின்னர், வெற்றியாளரை நிர்ணயிக்கும் முக்கியமான நான்காவது சுற்றில் அபாரமாக ஆடிய ஆனந்த் எளிதில் வெற்றிபெற்றார். இதன் மூலம் 2.5 - 1.5 என்ற புள்ளிக்கணக்கில் கசிம்ஷினோவை வீழ்த்தி, சம்பியன் பட்டம் கைப்பற்றினார் ஆனந்த். (ஓ)

## இந்தியா - இலங்கைக்கு இடையே நவம்பரில் 7 ஒருநாள் போட்டிகள்

கொழும்பு,ஜூன்15

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள இலங்கை அணி 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடும். எதிர்வரும் நவம்பரில் இப்போட்டிகள் தொடங்கும்.

'முன்னதாக 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பது என முடிவுசெய்திருந்தோம். இப்போது கூடுதலாக 2 ஒருநாள் ஆட்டங்களில் பங்கேற்க விரும்புகிறோம்' என்று இலங்கைக் கிரிக்கெட் இடைக்காலக் குழுவின் செயலர் டிரைபோன் மிராண்டா கொழும்பில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:-

இந்தியாவுடன் அடுத்த ஆண்டும் சுற்றுப் பயணம் செய்வோம். அப்போது நடைபெறவுள்ள 3 நாடுகள் தொடரில் பங்கேற்போம்.

இப்போட்டியின் மூன்றாவது அணியாக மேற்கிந்தியத்தீவுகள் அணி பங்கேற்கும்.

இலங்கைக் கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜூலை முதல் அடுத்த ஆண்டு ஜூலை வரை ஏராளமான போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

15 டெஸ்ட் போட்டிகள், குறைந்தபட்சம் 44 ஒருநாள் ஆட்டங்களில் இலங்கை அணி விளையாடும் - என்றார் அவர். (ஓ)

## இளையோர் தடகளப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

'ரில்கோ ஹொலிடேய்ஸ்' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடுசெய்த இளையோருக்கான தடகளப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதல்மூன்று இடங்களையும் முறையே பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

### 10 வயதுப் பிரிவு (ஆண்கள்)

**நீளம் பாய்தல்**- என்.அனுஜன்,பி.நிரோவின், எம்.ஆகஷான்.

**100 மீற்றர் ஓட்டம்** - என்.அனுஜன், ஆர்.பிறிசங்கர், என்.கிருஷகன்.

**உயரம் பாய்தல்** - எஸ். மிதுஷன், ஏ.பிர்தோசசர்மா, ஜே.தனுஷ்ரன்.

**பந்து எறிதல்** - ஆர்.பிறிசங்கர், எம்.ஆகஷான், எம்.கிரிஷாந்.

**80 மீற்றர் ஓட்டம்** - என்.அனுஷன், எம்.ஆனுஷன், ஏ.பிறிதோசசர்மா.

### 10 வயதுப் பிரிவு பெண்கள்

**100 மீற்றர் ஓட்டம்** - எம்.ஜோய் 'கருணியா, கே.சிந்துஷா, எம்.நர்மதா.

**நீளம் பாய்தல்** - எம்.ஜோய் கருணியா, ஜே.சித்ஷா, எம்.நர்மதா.

**உயரம் பாய்தல்** - எஸ்.பிறிநதிகா, ஆர்.விஸ்ணுகா.

**பந்து எறிதல்** - எம்.ஜோய் கருணியா, கே.நர்மதா, எம்.நட்டஷா.

**80 மீற்றர் ஓட்டம்** - எஸ்.துசித்திகா, கே.சிந்துஷா, எம்.நர்மதா.

### 12 வயதுப் பிரிவு (ஆண்கள்)

**பந்து எறிதல்** - கே.சிலோசன், எஸ்.சிந்துஷன், ஆர்.றஜீவன்.

**100 மீற்றர் ஓட்டம்** - எஸ்.துசியந்தன், ஆர்.றஜீவன், எஸ்.தர்சன்.

**நீளம் பாய்தல்** - கே.சிலோசன், எஸ்.துசியந்தன், வி.சசிக்குமார்.

**80 மீற்றர் ஓட்டம்** - சி.மடேன் எல்விஸ், கே.சிலோசன், ஏ.ஆதவன்.

### 12 வயதுப்பிரிவு (பெண்கள்)

**பந்து எறிதல்** - ரி.சியாமிளா, ஆர்.பிரியங்கா, வி.துர்க்கா.

**100 மீற்றர் ஓட்டம்** - எஸ்.நிருசியா, வை.டிலக்சன், சி.ரிஷானா.

**உயரம் பாய்தல்** - எஸ்.நிருயா, ஆர்.பிரியங்கா, வை.டிலக்சன்.

**நீளம் பாய்தல்** - டி.அபிராமி, எ.கீர்த்தினி, வி.துர்க்கா.

**80 மீற்றர் ஓட்டம்** - எஸ்.நிருயா, வை.டிலக்சனா, சி.கிஷானா.

### 14 வயதுப் பிரிவு (ஆண்கள்)

**நீளம் பாய்தல்** - எம்.கரிஸ், ஆர்.நிருஷன், ரி.சயந்தன்.

**200 மீற்றர் ஓட்டம்** - எம.கரிஸ், ஆர்.எட்வேட், ஜி.சுலக்சன்.

**80 மீற்றர் தடைதாண்டல்** - ஆர்.எட்வேட், ஆர்.விதுஷணன், எம்.கரிஸ்.

**100 மீற்றர் ஓட்டம்** - ஆர்.எட்வேட், எம்.கரிஸ், ரி.யதுஷ்ஷான்.

**உயரம் பாய்தல்** - எம்.கரிஸ், ஆர்.வதுஷன், எம்.சயந்தன்.

### 14 வயதுப்பிரிவு - பெண்கள்

**200 மீற்றர் ஓட்டம்** - வி.கார்த்திகா, எஸ்.கம்ஷா, எஸ்.சிந்துஷா.

**நீளம் பாய்தல்** - எஸ்.சிந்துஷா, எஸ்.கம்ஷா, ரி.தனலக்சுமி.

**100 மீற்றர் ஓட்டம்** - வி.கார்த்திகா, ரி.கார்த்திபா, எஸ்.கம்ஷா.

**80 மீற்றர் தடைதாண்டல்** - ரி.கார்த்திபா, எஸ்.கம்ஷா, ரி.தனலக்சுமி.

**உயரம் பாய்தல்** - பி.றூபனா, எஸ்.சிந்துஷா, வி.சகரியா.

**10 வயது ஆண்கள் பிரிவில்** - என்.அனேஷன் சிறந்த தடகள வீரனாகவும், பெண்கள் பிரிவில் எம்.ஜோய் கருணியா சிறந்த தடகள வீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**12 வயது ஆண்கள் பிரிவில்** - எ.சுலோசன் சிறந்த தடகள வீரனாகவும், பெண்கள் பிரிவில் எஸ்.நிருஷா சிறந்த தடகள வீராங்கனையாகவும்,

**14 வயது ஆண்கள் பிரிவில்** - எம்.கரிஸ் சிறந்த தடகள வீரனாகவும், பெண்கள் பிரிவில் வி.கார்த்திகா சிறந்த தடகள வீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (த-190)

# இன ஒற்றுமைக்கு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 51 மணி நேர விவாதம்

'சிங்களம் மட்டும்' அரச கருமமொழி மசோதா. 1956 ஜூன் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பான விவாதம் அம்மாதம் 15ஆம் திகதி வரை 7 நாள்கள் இடம்பெற்றன. 14ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான விவாதம் உணவு இடைவேளைகூட இன்றி தொடர்ந்து 18 மணித்தியாலங்கள் நடைபெற்று, 15ஆம் திகதி காலை முடிவுற்றது. இது தொடர்பான விவாதம் மொத்தமாக 51 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் இடம்பெற்றன.

எதிர்க்கட்சிகள் சார்பில் முடிவுரையை கலாநிதி கொல்வின் ஆர்.டீ.சில்வா அதிகாலை 4.30இற்கு ஆரம்பித்தார். மசோதாவை ஆதரித்து முடிவுரையை பிரதமர் பண்டாரநாயக்க அதிகாலை 5.05இற்கு ஆரம்பித்தார். காலை 6 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது. மசோதாவுக்கு ஆதரவாக 66 உறுப்பினர்களும் எதிர்த்து 32 உறுப்பினர்களும் வாக்களித்தனர். 34 அதிகப்படியான வாக்குகளால் சிங்களம் மட்டும் அரச கருமமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ம.ஐ. முன்னணியினரும் ஐதேகட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர். சமசமாஜக் கட்சி, தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

14ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட விவாதத்தை விடியவிடிய நடத்தி வாக்கெடுப்பது என அரசு தீர்மானித்தது. நாடாளுமன்றத்தில் விவாதம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, அதில் அலுப்படைந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத் தேநீர்ச் சாலையில் கோப்பி அருந்திய வண்ணம் இருந்தனர் எனவும் - அதிகாலை 3 மணிக்கு கோப்பி தீர்ந்துபோகவே அதன் பின்னர் தேநீர் மட்டும் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பல உறுப்பினர்கள் தத்தமது ஆசனங்களில் உறங்கிக் கொண்டிருந்தனர் எனவும் பின்னர் அவர்கள் தட்டியெழுப்பப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நாடே அல்லோல கல்லோலப்பட்ட நிலையில் 'சிங்களம் மட்டும் அரசகரும மொழி' என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 31 வருடங்களின் பின்பு 1987இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாட்டிற்கமைய தமிழ் மொழியும் அரசகரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★


TELEPHONE INTERCOM SYSTEM




*02 to 100 Extension
*Call metering facility
*Automatic Fax switching
*1 Year warranty & After sales service

Micro Bytech Int (pvt) Ltd.
711, K.K.S, Road
Jaffna
T.P. 222 6188, 0773203721


## விடியோ புகைப்படக் கலைஞர்களுக்கு!

எதிர்வரும் (21-06-2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல.43 பிரப்பங்குளம் ஒழுங்கை, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஒளிக்கலை ஒன்றியப் பணிமனையில் விசேட பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஒன்றியத்தின் யாப்பு அங்கீகரித்தல், பதிவுசெய்தவர்களுக்கான அங்கத்துவ இலக்கம் வழங்குதல், எதிர்கால நடவடிக்கைகள் ஆகியவை இடம்பெறவுள்ளதால் அனைத்து வீடியோ, புகைப்படக் கலைஞர்களும் தவறாது சமுகமளிக்கவும். இதுவரை பதிவுசெய்யாதவர்கள் உடன் பதிவுகளை மேற்கொண்டு அன்றைய கூட்டத்தில் தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

குறிப்பு: பதிவை மேற்கொண்டவர்கள் தங்கள் பதிவுக்கான ஆவணத்தை தொழில் செய்யும் பொழுது நிச்சயம் வைத்துக்கொள்வதுடன் ஒன்றியத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இல. 43, பிரப்பங்குளம் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(36556)(26-13-15)

தலைவர்,
ஒளிக்கலை ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்.

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 16.05.2005 திங்கட்கிழமை சிவபதமடைந்த

திருமதி

### சிவமணி கந்தையா (ஆசிரியை)

தோற்றம்
04.01.1944

மறைவு
16.05.2005

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.06.2005) புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து இவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன், அன்பும் பண்பும் கொண்டு எங்களது வாழ்வின் வழிகாட்டியாய் விளங்கிய எமது குடும்பத் தலைவியின் எதிர்பாராத மறைவினால் எமக்கு ஏற்பட்ட துயரத்தில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் வைத்தியசாலையில் பல உதவிகளைச் செய்த டாக்டர், தாதியர் போதனாசிரியை அவர்களுக்கும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் இறுதி ஊர்வலத்தில் கண்ணீர் மல்க கலந்துகொண்ட யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவச் செல்வங்களுக்கும் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் பத்திரிகை, துண்டுப்பிரசுரம் மூலம் அனுதாபச் செய்திகளை வழங்கியவர்களுக்கும் எங்களது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

56/24, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(36485) (39-13-15-26)

- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
07 - 04 - 1927



மறைவு
18 - 05 - 2005

திருமதி

### பொன்னுத்துரை வேதநாயகி அம்மா

அன்புடனும் பண்புடனும் ஆதரவாய் அரவணைத்த
அன்பு அன்னையே!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (16.06.2005) வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண நிகழ்வும் மதியபோசனமும் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(36514)(39-13-15-26)

- பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### நிற்குணானந்தன் மகாரூபன்

(முன்னாள் கணக்காளர், கொழும்பு யானைச்சோடா நிறுவனம்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்டு தற்பொழுது கனடாவில் வசித்து வந்தவருமான நி.மகாரூபன் கடந்த 09.06.2005 வியாழக்கிழமை கனடாவில காலமானார்.

இவர் சுபாஷினியின் அன்புக் கணவரும் வித்தியாயினியின் அன்புத தந்தையும் காலஞ்சென்ற நிற்குணானந்தன் (முன்னாள் உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர்) புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் (கணேசு) - இராசம்மா (பூமணி) தம்பதிகளின் அன்பு மருமகனும் கைமா, சத்தியரூபன் (இங்கிலாந்து), ஆனந்தரூபன் (சவூதி), ஊர்மிளா (ஆஸ்திரேலியா), நித்தியரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேந்திரா, மகேந்திரா (சட்டத்தரணி இங்கிலாந்து), மல்லிகா, சுபோதினி (கனடா), விஜயகுமாரி, கதிரவேற்பிள்ளை (கால்நடை வைத்தியத்துறைப் பணிப்பாளர், கொழும்பு), மகேஸ்வரி (ஆசிரியை, நெல்லியடி மகாவித்தியாலயம்), ராஜ் (கனடா), ஜெயந்தி (இங்கிலாந்து), ஜெயக்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் கிருசாந்தி (வேணி) கிருபரட்ணம் பட்டயக்கணக்காளர், நிறுவனம் கொழும்பு-04), சக்திதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன், ஆண்டு 9) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2005) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*"விமலஸ்தான்"*
*இணுவில் மேற்கு,*
*தொலைபேசி 021-222-7781*
சு. இராஜேந்திரா,
(மைத்துனர்)
*"கணேசபவன்"*
*தாவடி தெற்கு, கொக்குவில்.*

நித்தியரூபன் (சகோதரர்),
3B, அரசினர்மாடி வீடுகள்,
கொழும்பு-4,
தொலைபேசி 011-2584473

(36530) (39-13-15-26)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
30 07 1934



மறைவு
25 06 2004

அமரர்

### குமாரவேலு தர்மலிங்கம்

(முன்னாள் வர்த்தகர், K.A. வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ், பதுளை.)
(விநாயகர் ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)

ஆண்டு ஒன்று நகர்ந்தாலும் - உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும் !

*115, ஒட்டுமடம் வீதி,*
*சிவலிங்கப்புளியடி,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

(36506)(56)

# கிளிநொச்சி கிழக்குப் பிரதேசம் அபிவிருத்தியில் புறக்கணிப்பு

## அப்பகுதி மக்கள் விசனம்

பரந்தன்,ஜுன்15

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் புறக் கிராமங்கள் அபிவிருத்தி நடவடிக்கையில் புறந்தள்ளப்பட்டுள்ளன என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறிப்பாக மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் என்பவற்றிலேயே இந் நிலை காணப்படுவதாக அவர்கள் குறை கூறுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கோரக்கன் கட்டு, முரசுமோட்டை, வெளிக்கண்டல், கண்டாவளை, தருமபுரம் போன்ற கிராமங்களில் போர் நடவடிக்கைக்கு முன்னர் இலங்கை மின்சார சபையால் மின்சாரம் வழங்கப்பட்டுவந்தது. போர்ச் சூழலால் மின்விநியோக சாதனங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. தற்போதைய அமைதிச் சூழலில் மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபை முன்வந்தது. அத்துடன், தொலைத்தொடர்பு சேவையை வழங்குவதற்கு ரெலிக்கொம் நிறுவனமும் முன்வந்தது.

இவற்றுக்கான கம்பங்கள் பலவும் வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ளன. இதேசமயம் ஒருசில கம்பங்கள் நடப்பட்டுள்ளன. ஆனால், அதன்பிறகு மின்விநியோகத்துக்கோ, தொலைத்தொடர்பு வசதிக்கோ எந்தவித வேலைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாகப் பொதுமக்கள் இலங்கை மின்சாரசபை அதிகாரிகளிடமும் ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகளிடமும் தொடர்புகொண்டு முறையிட்டனர் என்று கூறப்படுகிறது.

ஆனாலும், எந்தவிதப் பயனும் ஏற்படவில்லையென்றும் -

மின்சார மற்றும் தொலைத்தொடர்பு வசதிக்காகக் கொண்டுவந்து வீதியோரங்களில் போடப்பட்டிருந்த கம்பங்கள் மீண்டும் எடுத்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் - அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், கூடிய விரைவில் கிளிநொச்சி கிழக்குப் பகுதிக்கு மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அப்பிரதேச மக்கள் கோருகின்றனர். (ஒ-352-202)

## சாரணர் சேவை வாரம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்15

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை சாரணர் சேவை வாரம் அனுஷ்டிக்கவுள்ளது.

இதனை முன்னிட்டுச் சேவை வாரத்திற்குரிய அட்டைகள் மற்றும் விவரங்கள் ஆகியவை சாவகச்சேரி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்-

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிரதேச சாரண ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் கடிதத்துடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (204)




# விசுவமடு, கண்டாவளைப் பகுதியில் பொதுச்சந்தை அமைக்கக் கோரிக்கை

பரந்தன்,ஜுன்15

விசுவமடு மற்றும் கண்டாவளைப் பிரதேச மக்கள் நிரந்தரமான பொதுச்சந்தை இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.முன்னர் விசுவமடு சந்தியில் பொதுச்சந்தை இயங்கி வந்தது. அந்தச் சந்தை இருந்த காணி விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமானதாகும். மேற்படி சங்கம் சொந்தத் தேவையை முன்னிட்டு சந்தை இயங்கிய காணியை மீளப் பெற்றுக்கொண்டது. இதனால் பொதுச்சந்தை இன்றி இப்பகுதியில் உள்ள விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் விசுவமடு புன்னை நீராவியில் அரசுக்காணி ஏக்கர் கணக்கில் உள்ளதாகவும்-

இந்தக் காணியில் பொதுச்சந்தை மற்றும் பஸ்நிலையம் ஆகியவை அமைப்பது குறித்து நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருவதாகவும்-

ஆனால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-352)



**விசுவமடுப் பகுதியில் வீதிக்குக் குறுக்காக விழ்ந்து கிடக்கும் பாரிய மரத்தை அகற்றுவதற்கு எவரும் முன்வராததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.**

**விசுவமடு மேற்கு, நாச்சிக்குடா கிராமத்தின் வீதியொன்றில் நீண்டகாலமாக பாரிய மரமொன்று குறுக்காக விழ்ந்து கிடக்கின்றது.**

**இம்மரத்தை அகற்றுவதற்கு எவரும் இதுவரை முன்வரவில்லை. இதனால், அவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.**

**கூடிய விரைவில் இம்மரத்தை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஒ-352)**

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு உதவித்திட்டம்

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தியாவிலிருந்து 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் வருகைதந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ஒன்றுகூடல் கிளிநொச்சியில் இடம்பெற்றது. கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான உதவித்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அ.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த இராசன் ஏற்றிவைத்தார்.

சர்வதேச இடம்பெயர்ந்தோருக்கான உதவி வழங்கும் நிறுவன திட்டமுகாமையாளர் உதயகுமார், தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் வே.பூங்குன்றன், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசலிங்கம், மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், திருமதி பொன். நித்தியானந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

முதற்கட்டமாக இந்தியாவிலிருந்து வந்து கரைச்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த 120 பயனாளிகளுக்கு மலசலகூட வசதிகளை அமைப்பதற்கும், அவர்களின் வருமான அதிகரிப்பிற்காகத் தொழில் உபகரணங்களை வழங்குவதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-352-202)

# புதுக்குடியிருப்பு கூ.சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவுக்கூட்டம்

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிளைக்குழுக் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் கிளைகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

புதுக்குடியிருப்பு மேற்கு கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கூட்டம் க.சதீஸ்வரன் தலைமையில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலும்-

புதுக்குடியிருப்பு கிழக்கு கிளைக்குழுத் தெரிவதற்கான கூட்டம் சி.சிவகரன் தலைமையில் ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் -

புனித சூசையப்பர் கிளைக்குழுக் கூட்டம் சி.குலேந்திரம் தலைமையில் புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயத்திலும் -

ஆனந்தபுரம் கிளைக்குரிய கூட்டம் கு.உதயகுமார் தலைமையில் ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலையிலும் -

இரணைப்பாலைக் கிளைக்குரிய கூட்டம் சி.வசீகரன் தலைமையில் இரணைப்பாலை றோ.க. மகா வித்தியாலத்திலும் -

தேவிபுரம் கிளைக்குரிய கூட்டம் வ.நிருபாகரன் தலைமையில் தேவிபுரம் அ.த.க.பாடசாலையிலும் -

உடையார்கட்டுக் கிளைக்குரிய கூட்டம் ச.சுசீந்திரன் தலைமையில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்திலும் -

சுதந்திரபுரம் கிளைக்குரிய தெரிவு என்.ரவீந்திரன் தலைமையில் சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலையிலும் -

வள்ளிபுனம் கிளைக்குரிய தெரிவு சபாலகிருஷ்ணன் தலைமையில் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையிலும் நடைபெறும்.

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத் தேர்தல் அதிகாரி த.பத்மானந்தன் இதனை அறிவித்துள்ளார். (ஒ-410)

# செயலமர்வு

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளின் உபஅதிபர், பகுதித் தலைவர்களுக்கான பாடசாலை மட்ட முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு இன்று புதன்கிழமை முதல் இரு தினங்கள் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 8.30 மணிமுதல் 5.30 மணிவரை இடம்பெறும் இந்தச் செயலமர்வில் பாடசாலைகளின் உப அதிபர் மற்றும் பகுதித்தலைவர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பொ.பேரினபநாயகம் கேட்டுள்ளார். (ஒ-410)

# இலங்கைக்கு இந்தியா ராணுவ உதவியளித்தால் ஈழ அகதிகள் தமிழகத்தில் குவிய நேரிடும்!

## ஆகவே பாதுகாப்பு ஒப்பந்தம் கூடாது என்கிறார் ராமதாஸ்

சென்னை,ஜுன்15

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டால் மீண்டும் இலட்சக்கணக்கான ஈழ அகதிகள் தமிழகத்தில் தஞ்சமடையும் நிலை உருவாகும். ஆகவே, அத்தகைய ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை இலங்கையுடன் இந்தியா செய்துகொள்ளக்கூடாது.

- இவ்வாறு தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இக்கோரிக்கை தொடர்பாக ராமதாஸ் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான பொதுக்கட்டமைப்புப் பணிகளில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழர் அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவது என்ற இலங்கை அரசின் திட்டத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது. இது வரவேற்கத்தக்கது.

அதேசமயத்தில் இத்திட்டத்தைக் குலைத்திடும் செயல்களில் இலங்கையில் ஆளும் கூட்டணியில் உள்ள ஜனதா விமுக்தி பெரமுனையும், புத்த துறவிகள் கூட்டமைப்பும் தொடர்ந்து ஈடுபட்டுவருவதை இந்தியா கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சலசலப்பு மற்றும் புத்த துறவிகளின் செயல்களில் மயங்கிடாமல், இலங்கை சுனாமி நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்துக்கொண்டு செயற்பட இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து நிர்ப்பந்திக்கவேண்டும். இலங்கையில் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிக்கு இது ஒரு தொடக்கமாக அமையும்.

இந்த நிலையில் இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்க உதவுகிறோம் என்ற சாக்கில் இலங்கைக்கு எந்தவகையான இராணுவ உதவிகளையும் இந்தியா வழங்கக்கூடாது. பாதுகாப்பு ரீதியிலும், பூகோள ரீதியிலும் இலங்கையின் இறையாண்மைக்கு எந்தவொரு வெளிநாடுகளில் இருந்தும் எத்தகைய அச்சுறுத்தலும் ஏற்படுவதற்கு இடமே இல்லை. எனவே, இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பு சம்பந்தமான உடன்பாடு செய்துகொள்வதற்கும், இராணுவ உதவிகள் வழங்குவதற்கும் எந்த அவசியமும் இல்லை.

இந்தியா வழங்கும் இராணுவ உதவியை இலங்கையில் சிறுபான்மையினராக உள்ள தமிழர்களுக்கு எதிராகவே அந்நாடு பயன்படுத்தும். அத்தகைய நிலையில் மீண்டும் இலங்கையில் இருந்து பெருவாரியான தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம்புகும் ஆபத்தும் இருக்கிறது. ஏற்கனவே இங்கு அகதிகளாக வந்துள்ள இலங்கைத் தமிழர்கள் இன்னும் தாயகம் திரும்பாத நிலையில் மேலும் பல லட்சம் பேர் அகதிகளாகிவரும் நிலைமை ஏற்பட இந்தியா எந்தவகையிலும் காரணமாக இருந்துவிடக்கூடாது.

ஆகவே, இலங்கை அரசுக்கு எத்தகைய இராணுவ உதவிகளையும் வழங்காமல், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபடவேண்டும்.



அதன் மூலம் இலங்கையில் தமிழர்கள் வாழ்வுரிமை, கலாசார, பண்பாட்டு உரிமை, மொழி உரிமை உட்பட அனைத்து உரிமைகளுடனும் வாழ்வதற்கான சூழ் நிலையை ஏற்படுத்தி இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண இந்தியா நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அதுவரையில் இலங்கையுடன் எத்தகைய பாதுகாப்பு உடன்பாட்டையும் செய்துகொள்வதை இந்தியா தவிர்க்கவேண்டும். இது இந்தியத் தமிழர்கள் உள்ளிட்ட உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு - இவ்வாறு ராமதாஸ் கூறியுள்ளார். (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

விற்பனையில் சாதனை செய்த 'இது இந்து மதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண் டும்' விற்பனைக்குண்டு. விலை ரூபா 80/-. தொடர்பு: பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 222 2365.(36540)

## வீடு விற்பனைக்கு

பல்லப்பை, புலோலி தெற்கு, புலோலி என்ற இடத்தில் நல்ல சுற்றாடலில் விசாலமான காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 3164361. (36538)

உடுவில் ஆலடியில் பிரதான வீதிக்கு அருகில் பழைய வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0779 - 061526. (36507)

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையில் உள்ள 64 - xxxx Nissan Sunny இனத்தைச் சேர்ந்த கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.திரவியம், சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. 0777 570285. (36567)

## காணி விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்ப னைக்குண்டு. தொடர்பு: சிறிகாந்தன் (சுப்பிர மணியம் ஆசிரியர்) குப்பிளான் சந்தி, குப்பிளான். T.P.: 0777 - 579834 (கொழும்பு), 0322267130 (புத்தளம்) (36423)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் உடன் சுத்தம்செய்து தினமும் பெற் றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.

(36373)

## கோழித்தீன் விற்பனைக்கு

ஒரிஜினல் பிறிமா கோழித்தீன் C.I.C கோழித்தீன், கோழி மருந்துகள், புறொயிலர் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K. Farm பெரிய மதவடி, மானிப்பாய் வீதி, உடுவில். (36001)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் விநியோகிக்கப்படும். எமது பருத் தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம்- தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்தி ரைச்சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (36569)

## இமயம் - நாடகநூல்

மாணவர்களுக்குப் பொருத்தமான நவீன நாடகங்கள், கொண்ட ஒரேயொரு நூல் உல கெங்கும் பெருவழக்காயுள்ள நாடகங்கள், வருங்காலத்துக்கு வேண்டிய நாடகங்கள் எல்லா நூலகங்கள், பாடசாலைகளிலும் இருக்க வேண்டிய நூல்.

(36566)

## தவறிவிட்டது

கதிரித்தம்பி வடிவேல்நாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 520843035V) வடமராட்சியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் இலங்கை வங்கி இரண்டாவது கிளையில் (ஸ்ரான்லி வீதி) ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(36572)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By: விக்னேஸ்வரன் ஆச்சா 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம, பிளாக் வீதி, சங்கானை.
(36568)(21-18-15)

**அப்பளம் தயாரிக்க மா**

அப்பளம் தயாரிப்பதற்கேற்ற தனி உழுந்துமா விற்பனைக்குண்டு.
**M.G.M & ஸ்ரோர்ஸ்**
இல.777. கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
(36445) ☎ 222 7894 (21-18-15)

**திருமணக்கார் வாடகைக்கு**

குளிரூட்டியது
(திருமண,விசேட, சுற்றுலா வைபவங்களுக்கு)
**சிவா வீடியோ லைபிறறி**
இராமலிங்கம் வீதி,
மூடமாவடி
(பூங்கனிச் சோலை அருகில்).




## தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் தகரக் கொட்டகை

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வரும் பொதுமக்களின் நல்ன் கருதி ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் தகரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இக் கொட்டகை அமைப்பதற் கான நிதியினை வழங்கியுள்ளது.

தனியார் வீடொன்றில் இயங்கி வரும் பிரதேச செயலகக் கட்டடத்தில் இடநெருக்கடி உள்ளதால் பொதுமக்கள் தமது தேவைக்காக வெயிலில காத்திருக்க வேண்டியிருந்தது. இதனைக் கருத்திற்கொண்டு இந்தக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. (8-117)


**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**



15.06.2005

செல்வப் புதல்வன் எமில்ராஜ் மைக்களின்

எமிலியானிஸ் - கல்பானா தம்பதியினரின் செல்வப் புதல்வன் எமில் ராஜ் மைக்களின் தனது முதலாவது பிறந்ததினத்தை ஜேர்மனியில் இன்று (15.06.2005) புதன்கிழமை வெகுவிமரிசையாக தனது இல்லத்தில் தாய், தந்தையுடன் கொண்டாடுகின்றார்.

இவரை லண்டனில் வசிக்கும் ஜேகன் (சித்தப்பா), சோபிக (சித்தி), அன்ரனி (பெரியமாமா), செல்வறாஜினி (மாமி), சகிலா (மச்சாள்), சவுதியில் இருக்கும் மதன் (மாமா), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பம்மா, அப்பப்பா, மாமிமார், சித்தப்பாமார், இளவாலையில் இருக்கும் அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், சித்தி மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருளினால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அ.க.புஸ்பராசா செல்வராணி
(அப்பப்பா, அப்பம்மா)

159, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(36348)(50-15-13)


## மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

### அழைப்புக் கட்டளை [இல.16 - பிரிவு 55 (1)]

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/நீதிமன்றத்தில்
பச்சைமுத்து வெற்றிவேலு,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

வழக்கு இல: காணி / 500 எதிர்- வழக்காளி/கள்

1. செல்லப்பா துரைசிங்கம்
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
2. துரைசிங்கம் பெண் லோகேஸ்வரி
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
3. கணபதிப்பிள்ளை சந்திரகுமார்
(Known as Thavam)
ரூபன் லொறி (ரூபியகம்) உரிமையாளர்
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

எதிராளி/கள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 1ஆம், 2ஆம் எதிராளி/களு/க்கு மேலே பெயா குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளியின் காணியையும் பாதை நிலத்தையும் எதிராளிகள் அடாத்தாக தங்கள் காணியுடன் சேர்த்துள்ளார் என்ற தீர்ப்பும் பெற -

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால், இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி, ஏதேனும் இருப்பின், 2005ஆம் ஆண்டு ஆனி மாதம் 23 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத் திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப் பத்தில், வழககானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தலகளும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக்குறிப் பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது: செ.ந.விஸ்வலிங்கம்
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
ச.வன்னியசிங்கம்
பதில் பதிவாளர்

குறிப்பு:- விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால், பதிவு செய்யப் பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும முத்திரை களைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம்: பதில் பதிவாளர் ச.வன்னியசிங்கம் (36547)(21-15-18)
2005 ஆண்டு ஆனி (06) மாதம் 13 ஆந் நாளாகிய இன்று


**வேதாகமக் கருத்தரங்கு**

யோவான் 15:1–5

**திராட்சைச் செடியின் இரகசியங்கள்**

தினம்: 2005, ஆனி மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை
இடம்: வீரசிங்க மண்டபம், யாழ்ப்பாணம்
இந்தியாவிலிருந்து வருகை தரும்
Rev.V.சத்தியபால் அவர்கள் இக்கருத்தரங்கை நடத்துவார்.
மதிய ஆகாரம், தேநீர், இப்பாடத்திற்குரிய குறிப்புப் புத்தகம் கொடுக்கப்படும்.
பதிவுக்கட்டணம்: ஒருவருக்கு ரூபா 50/-
உங்கள் யாவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.
ஒழுங்கு செய்பவர்கள்:
வேதாகமத்திற்கூடாக நடத்தும் ஊழியங்கள், இலங்கை
(Walk Thru the Bible Ministries Lanka)
தொலைபேசி: 031 2277704 அல்லது 077 7174024

குறிப்பு: 16ஆம், 17ஆம் திகதிகளில் இவர்களின் ஏற்பாட்டில் யாழ். Y.M.C. மண்டபத்தில் திருமண வாழ்க்கையைக் குறித்த வேதாகம சித்திரப் பாடத்தின் பயிற்சி முகாம் இடம்பெறும், பங்கு பற்றுபவர்கள் உங்கள் விண்ணப்பப்பத்திரங்களை பாஸ்டர் மதியிடம் கொடுக்கவும்.
(36329) (24-18-15)

**To become a chartered Accountant / Accounting Technician...**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
09.07.2005

| Chartered Accountancy - Jan 2006 | Foundation | Intermediate |
|---|---|---|
| aat - Dec. 2005 | Foundation | Intermediate | Final |

புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் 30-06-2005 வரை ஏற்றுக்கொள் ளப்படும். அனுமதிகள் வரையறுக் கப்பட்டுள்ளதால் உங்கள் பதிவினை உடன் உறுதிப்படுத்துங்கள்.

நான்காவது அவையில் கால்பதிக்கின்றோம்

**IPAS** 199, Main Street, Premier Bakery Building, Jaffna
Tel: 0777 - 563294 / 270452
Office Hours Mon., Wed., Fri., Sat.& Sun. 9 a.m.-1p.m.

மீண்டும் உற்பத்திகளை ஆரம்பித்துள்ளோம்





**நொர்தேண் இன்டஸ்ரீஸ்**
ரயர் நிரப்புநர்களும்
சைக்கிள் ரயர், ரியூப் உற்பத்தியாளர்களும்
69, பிறவுண் வீதி, கொக்குவில்


## உடன் தேவை

**வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்**
**கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள**

கூலி ஒப்பந்த அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள், சாதாரண கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தகுதியான ஆளணி உடையோரும், ஆற்றலுடையோரும உடன் தேவை.

★ கூலி விதம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தகுதியுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,**
கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
(சி-43410) தொலைபேசி எண்: 021 228 5917 (18-16)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ/இல.: 151/04,
தன்மை: மணநீக்கம்

வழக்காளி:
இராசையா பாக்கியராசா,
முருகன் கோயில் அருகில்
முல்லைச்சாலை, பரந்தன்.
எதிராளி:
பாக்கியராசா தயாவேணி
வின்சன் வீதி, சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கின் வழக்காளியால் எதிராளியாகிய உமக்கு எதிராக மணநீக்கம் பெறுவதற்கு ஒரு வழக்கைத் தாக்கல் செய்து அவ்வழக்கில் உமக்கான அழைப்புக் கட்டளையை சேர்ப்பிக்க வழக்காளி முயற்சிசெய்து, அது கைகூடாததால் இப்பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட பகிரங்க அறிவித்தல் மூலம் தங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இதில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இப்பிரசுரம் கிடைத்து 21 நாள்களுக்குள இம்மன்றில் நீரோ அல்லது உம்மில் உரித்துடையோரோ, தோன்றி இதற்கான ஆட்சேபனையை மேற்கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் குறித்த வழக்கை ஒருமுக விசாரணை மூலம் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

'மன்றின் கட்டளைப்படி'

பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

வரைவு வழ/சட்டத்தரணி
(C/43398)(21-15-18)

# யாழ்.மாவட்ட பொலீஸ் நிலையங்கள் குறித்த மனித உரிமைக்குழுவின் விசாரணை பூர்த்தி

வலி.வடக்கு,ஜூன்15


யாழ்.மாவட்டப் பொலீஸ் நிலையங்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் நடத்திய முதற்கட்ட விசாரணைகள் பூர்த்தி அடைந்துள்ளன. பொதுமக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே காணப்படும் முரண்பாடுகள், பொலீஸாருடன் தொடர்பு கொள்வதில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவை குறித்து இந்த விசாரணைகளின்போது ஆராயப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பொலீஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலீஸாரின் எண்ணிக்கை 30 இற்கும் குறைவாகவே உள்ளது என்றும் -

இதனால், பொதுமக்கள் செய்யும் முறைப்பாடுகளை உரிய முறையில் பதிவதில் இடையூறு ஏற்படுவதாகவும் -

தொடர்பாடல் செய்வதற்கு தமிழ் தெரிந்த பொலீஸார் போதுமான எண்ணிக்கையில் இல்லாது இருப்பதால் மக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே முரண்பாடுகள் நிலவுகின்றன என்றும் - விசாரணைகளில் தெரியவந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினர் விரைவில் பொலீஸ்மா அதிபருடன் கலந்துரையாட உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளான எம்.வி.இசற்.பெரோஸ் மற்றும் ரி.சுவேந்திரராசா ஆகியோர் சுமார் ஒரு வாரகாலம் இந்த விசாரணையை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தககது. (ஒ-86)



யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைச் சந்திக்க வரும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சிறைச்சாலைக்கு வெளியே உரியநேரம் வரும்வரை காத்திருக்கின்றனர். அவ்வேளையில், அவர்கள் வெயிலில் வாடியும் மழையில் நனைந்தும் அல்லற்பட நேரிடுகிறது. ஆகவே சிறைச்சாலை நிர்வாகம் நிழல் கொட்டகை ஒன்றை அமைப்பது பயனளிக்கும் என்று நம்பப்படுகின்றது. அண்மையில் யாழ்.நகரில் கைது செய்யப்பட்டவர்களான வெளிநாட்டுக் கடிகார விற்பனையாளர்களைச் சந்திப்பதற்காக அவர்களது நண்பர்கள் யாழ்.சிறைச்சாலைக்கு வெளியே காத்திருப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-51)

## 'பத்தும் விமன' சீட்டிழுப்பு

சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியில் சேமிப்புக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கு என்பவற்றை பேணிவருகின்ற வாடிக்கையாளர்களுக்கிடையிலான 'பத்தும் விமன'. சீட்டிழுப்பு வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வலி.தெற்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி, வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சீட்டிழுப்பை ஆரம்பித்து வைத்தனர். (ஒ-152)

## நெல்லியடிச் சந்தியில் ஒளிராத மின்குமிழ்கள்

கரவெட்டி,ஜூன்15

நெல்லியடிச் சந்திப் பகுதியில் வீதி விளக்குகள் பலவாரங்களாக ஒளிராத நிலையில் உள்ளன. இதனால், இரவுவேளைகளில் இப்பகுதியில் மக்கள் போக்குவரத்துச் செய்ய அஞ்சுகின்றனர். மேலும் இருள் நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்தி அப்பகுதி வீதியில் சிலர் மது அருந்தி அட்டகாசம் புரிகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஒ-70)

## கோவிலாக்கண்டி கிராமத்தில் சேவா லங்காவின் உதவித்திட்டம்

தென்மராட்சி,ஜூன்15

தென்மராட்சி தெற்கு, கோவிலாக்கண்டி கிராமத்தில் சேவா லங்கா நிறுவத்தினர் 60 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்கீழ் கிராமத்தில் உள்ள முருகன் வீதி, ஐயனார் வீதி, அம்மன் வீதி ஆகியவை புனரமைக்கப்படும். வறுமைக்கோட்டின்கீழ் உள்ள 150 குடும்பங்களுக்கு மலகூடம் அமைததுத்தரப்படும். மீளக்குடியமர்ந்துள்ள 190 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளையும் சுயதொழில் முயற்சிக்கு சுழற்சிமுறைக் கடன்களும் வழங்கப்படவுள்ளன.

அண்மையில் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இத்திட்டங்கள் பற்றி அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## அன்னதான, திருமண மண்டபம் கயிற்றாசிட்டியில் திறப்பு

தென்மராட்சி,ஜூன்15

கைதடி கயிற்றாசிட்டி கந்தசாமி ஆலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட அன்னதான, திருமண மண்டபம் கடந்த 10 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.




டாக்டர் கே.ரீ.எஸ்.சபாநாதன் மண்டப பெயர்க்கல்லையும், இளைப்பாறிய நிர்வாக சேவை அதிகாரி வே.பொன்னம்பலம் மண்டபத்தினையும் திறந்துவைத்தனர்.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் ச.இராசையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்டப கட்டடக் கலைஞர் சி.இரத்தினமும், பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம், கைதடி சச்சிதானந்த ஆச்சிரமத் தலைவர் சி.குழந்தைவடிவேல் தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-117)

## பெற்றோர் கல்வித் திட்டத்துக்கு மேலும் 4 கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.மாவட்ட 'ரீடோ' நிறுவனம் பெற்றோர் வீட்டுக் கல்வித் திட்டத்திற்கு மேலும் 4 கிராமங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்துள்ளதாக -

ரீடோ நிறுவன யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வே நிதியுதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

தற்போது முன்னுரிமை அடிப்படையில் கடடுடை, முள்ளி, சாவற்கட்டு, சில்லாலை ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் பெற்றோர் வீட்டுக் கல்வித் திட்டம் மூலம் 360 பயனாளிகள் நன்மை பெறுவர். கடந்த வருடம் 5 கிராமங்களளில் நடத்தப்பட்ட பெற்றோர் வீட்டு கல்வி திட்டம் வெற்றியளித்துள்ளது என்றார் அவர். (ஒ-185)

## மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் சில்லாலையில் அங்குரார்ப்பணம்

வலி.தென்மேற்கு,ஜூன்15

சில்லாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான புதிய மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப்பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர் அங்குரார்ப்பண நிகழ்விற்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:-

நியாப் -II திட்டத்தின் கீழ் இக்கிராமம் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதால் இப்பிரிவில் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக மக்களின் பங்களிப்பு பெறப்படவுள்ளது. ஆகவே இப்புதிய சங்கத்தின் மூலம் பல்வேறு நன்மைகளை இதன் உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார்.

இந்தச் சங்கத்தின் தலைவராக திருமதி ஜெனிற்றா அல்பிரட் நல்லையாவும் செயலாளராக திருமதி கொறற்றி செல்வரத்தினமும் பொருளாளராக செல்வி சிசிலியா அந்தோனிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.(ஒ-135)

## யாழ்., நல்லூர் பிரதேசங்களில் கிராம மேம்பாட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.-நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையும் இணைந்து அரசியல், சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை கிராமிய ரீதியாக மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கு முதற்கட்டமாக ஜே.114 கிராம அலுவலர் பிரிவிலுள்ள திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கிராம மக்களின் வாழ்வுத்தரத்தை உயர்த்தும் வேலைத்திட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இப்பகுதி பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இக்கிராமிய செயற்பாட்டில் மருத்துவம், கல்வி, கலை, கலாசாரச்செயற்பாடுகள், நடமாடும் சேவைகள், பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகள், சமூகவிழிப்புணர்வூட்டல் கருத்தரங்குகள், சிரமதானம், குறைகேள் சேவைகள் என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டச் செயலக, பிரதேச செயலக, திணைக்கள துறைசார் கருமபீடங்கள் என்பன இத்தினங்களில் செயற்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-30)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 11 விடைகள்

நேற்றைய 'உதயனில்' வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.11 இற்கான விடைகள் வருமாறு:-

வினாத்தாள் - I

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (01) 3 | (02) 3 | (03) 3 | (04) 1 | (05) 2 | (06) 3 | (07) 3 | (08) 2 | (09) 2 | (10) 3 | (11) 2 | (12) 2 |
| (13) ⑥ | (14) 12 | (15) 3 | (16) 2 | (17) 4 | (18) 3, 1 | (19) 5 | (20) 2 | (21) 1 | (22) 1 | (23) 8 | (24) 10 |
| (25) 2 | (26) 6 | (27) 2 | (28) 3 | (29) 1 | (30) 1 | (31) 1 | (32) 2 | (33) 1 | (34) 1 | (35) 2 | (36) 1 |
| (37) 2 | (38) 3 | (39) 2 | (40) 1 | | | | | | | | |

வினாத்தாள் - II

(01)
1) தாவிக்குதிப்பதாக 2) கப்பல் அசையும் 3) முத்து 4) நீ 5) பார் 6) தம்பி தம்பி 7) அலையை 8) ஆழி, சாகரம், பரவை (9) திரை (10) புனல், சலம் 11) நிலம் 12) அலங்கோலம்/அவலட்சணம் 13) மிதந்து 14) தம்பிமார் 15) தரைகளில் 16) Water 17) Fish 18) Ship 19) Sea

(02) 1) டெங்கு 2) நீர்வெறுப்பு 3) பிளேக்

(03) 1) 175 2) 25 3) 195 4) 450 ரூபா 5) 395 6) 325 ரூபா

(04) 1) 2 2) 1 3) 3 4) 2 5) 3

(05) 1) இ 2) உ 3) ஆ 4) ஈ 5) அ

(06) 1) முது தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி 2) மஞ்சள் 3) புதன் 4) நீல்ஆம்ஸ்ரோங் 5) குளோரீன்

(07) 1) ஆண்களுக்கு மாத்திரம் 2) பெண்கள் மாத்திரம் 3) புகைத்தல் தடை 4) பேருந்து தரிப்பிடம்

(08) 1) 2 2) 5 3) 3 4) 1 5) 4

(09) 1) சீனப் பட்டம் 2) பாரம்பரியப் பட்டம்

(10) 1) ✗ 2) ✓ 3) ✓ 4) ✓ 5) ✗ 6) ✓ 7) ✗ 8) ✗

(11) 1) Puppy 2) Wher 3) Your 4) Yesterday 5) Night

(12) 1) 75 Cm 2) 1/8 3) வடக்கு 4) 36 5) 5 நாளுக்கு 6) 150 லீற்றர் 7) 600 ரூபா

(13) 1) 30 ரூபா 2) ரூபா 83.25 3) 14 ரூபா 4) 5 ரூபா 10 சதம் 5) 95 ரூபா 25 சதம்

(14) 1) விளையாட்டுமைதானம் 2) பத்து

(15) பொருத்தமான வசனங்கள்

புள்ளித்திட்டம் வினாத்தாள் I : 40x2½ = 100 புள்ளிகள்

வினாத்தாள் II :

1) 19 புள்ளிகள் 2) 3 புள்ளிகள் 3) 6 புள்ளிகள் 4) 5 புள்ளிகள் 5) 5 புள்ளிகள் 6) 5 புள்ளிகள் 7) 4 புள்ளிகள் 8) 5 புள்ளிகள்
9) 2 புள்ளிகள் 10) 8 புள்ளிகள் 11) 5 புள்ளிகள் 12) 14 புள்ளிகள் 13) 5 புள்ளிகள் 14) 2 புள்ளிகள் 15) 12 புள்ளிகள்

100 புள்ளிகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில் 26 - 12 - 1930



ஆண்டவன் அடியில் 17 - 05 - 2005

### அமரர் வேலுப்பிள்ளை தண்டாயுதபாணி

*(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)*

*அன்பாய் அரவணைத்து எமை வளர்த்த அன்புத் தந்தையே!*
*எமையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தீரோ!*
*முப்பத்தொரு நாளென்ன எத்தனை வருடங்களானாலும்*
*உங்கள் ஊக்கங்களின் உணர்வுகள்*
*எங்கள் ஞாபகங்களில் கலந்திருக்கும்*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16-06-2005) வியாழக் கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்வுகளிலும் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்கு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழக்குத் தெரு,
வேம்படி,
வல்வெட்டித்துறை. (36563)(26-11-15)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## சிரமதானம்

சுழிபுரம்,ஜுன்15

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்கள் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் வீதியைச் சிரமதானம் மூலம் சுத்தம் செய்தனர். ஆலயத் தொண்டர் சபையினரும் இப்பணியில் ஈடுபட்டனர். (ஒ-28)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்
திரு. பொ. கமலநாதன்
அவர்களின் அன்புத் தந்தை

### கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அபி.சங்கம்.**
**யா/கொக்குவில் இந்து ஆர.பாடசாலை.**
(36576)(32-11-15-26)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலையத்தின் 31ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட மட்டத்திலான 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் (19-06-2005) ஞாயிறு காலை 6.00 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றும் வீரர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

செயலாளர்,
ஸ்ரீ காளி அம்பாள் விளையாட்டுக் கழகம்,
காளி கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

கட்டுப்பணம்: 100/- (36574)(26-11-15)

## உடனடி வேலைவாய்ப்புகள்

1. விற்பனையாளர்கள்
   - புடைவை விற்பனை நிலையங்கள்
   - அழகுசாதனப் பொருள்கள் விற்பனை நிலையங்கள்
   - மருந்து விற்பனை நிலையங்கள் *(பயிற்சி பெற்ற)*
2. வீட்டுப் பணிப்பெண் (கொழும்பு, யாழ்ப்பாணம்)
3. தொலைபேசி இயக்குநர்கள்
4. பாதுகாவலர்கள் (30 - 60 வயது)
5. தொடர்மாடி நிர்மாணத்துறையில் முன்னணி ஒப்பந்தகாரர்களின் கீழ் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள்.

மற்றும் அனைத்து வேலைகளுக்கும் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

**FIRST MAN POWER CENTRE & JOB AGENTS** (POWER GYM BUILDING)
230/1, நாவலர் வீதி,
(ஆனைப்பந்தீர் சந்திக்கருகில்).
யாழ்ப்பாணம்.

T.P.: 021 2223298, 0777 252098.
(C/43414)(26-11-15)

# கேள்வி அறிவித்தல்

## மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாணசபை

### சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுததலும் மீள் எழுதலுக்குமான திட்டம் (STAART) உட்கட்டமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் (IRP)

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான (STAART) திட்டச் செலவின் பொருட்டு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC) நிதி உதவித் திட்டத்தின்கீழ் கடன்தொகை ஒன்றினைப் பெற்றுள்ளதுடன் அந்நிதியின் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பொருத்தமான செலவுகளை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| கேள்வி குறிமீட்டு இல. | வீதியின் பெயர் | இக்ராட் (வீதி) பதிவின் ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | கேள்விப் பிணை ரூபா |
|---|---|---|---|---|
| மாவட்டம்: முல்லைத்தீவு | | | | |
| STAART/NEP/MU/7A | இரட்டை வாய்க்கால் - மத்தளம் சாலை வீதி 2-8 கி.மீ. | M5 | 1,750/- | 170,000/- |
| STAART/NEP/MU/7B | இரட்டை வாய்க்கால் - மத்தளம் சாலை வீதி 9-13 கி.மீ. | M5 | 1,500/- | 140,000/- |
| மாவட்டம்: மட்டக்களப்பு | | | | |
| STAART/NEP/BT/1A | டச் பார் முகத்துவாரம் ஸ்ரேஜ் - 1 (0-3கி.மீ) | M5 | 1,750/- | 120,000/- |
| STAART/NEP/BT/5 | ஒந்தாச்சிமடம் மகிளூர் குருமண்வெளி வீதி | M5 | 1,750/- | 140,000/- |
| மாவட்டம்: திருகோணமலை | | | | |
| STAART/NEP/TC/9 | பௌல் முனை வீதி | M5 | 1,750/- | 155,000/- |
| STAART/NEP/TC/11 | வெருகல் முகத்துவாரம் வீதி | M5 | 1,750/- | 115,000/- |
| மாவட்டம்: யாழ்ப்பாணம் | | | | |
| STAART/NEP/JF/1A | மண்முனை - கட்டைக்காடு வீதி பகேஜ் - 1 (0 - 6 கி.மீ.) | M5 | 1,750/- | 192,500/- |
| STAART/NEP/JF/1B | மண்முனை - கட்டைக்காடு வீதி பகேஜ் - 2 (7 - 10 கி.மீ.) | M5 | 1,750/- | 175,000/- |
| STAART/NEP/JF/1C | மண்முனை - கட்டைக்காடு வீதி பகேஜ் - 3 (11 - 14 கி.மீ.) | M5 | 1,750/- | 182,500/- |
| STAART/NEP/JF/1D | மண்முனை - கட்டைக்காடு வீதி பகேஜ் - 4 (15 - 22 கி.மீ.) | M5 | 1,750/- | 102,500/- |

2. மேலே குறிப்பிட்ட வேலைகளுக்கான பொறிவைக்கப்பட்ட (Sealed) கேள்விகள் அமைச்சு கேள்விச் சபையின் சார்பில் மாகாணப் பொது நிர்வாக, வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி அமைச்சு செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.
3. கேள்வி ஆவணங்களைத் திருகோணமலை கிறீன் வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2005-06-15ஆம் திகதி முதல் 2005-07-06 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.
4. கேள்வி ஆவணங்களை மேற்கூறிய அலுவலகத்தில் கட்டணம் எதுவுமின்றிப் பார்வையிடமுடியும்.
5. கேள்விகள் அவை சமர்ப்பிக்கும் நாளிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியானவையாகவிருத்தல் வேண்டும்.
6. கேள்விகள் மேலே கூறப்பட்ட கேள்விப்பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் பிணை ஆனது சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 118 நாள்களுக்குச் செல்லுபடியாகுமாறு இருத்தல்வேண்டும்.
7. கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய இறுதி திகதி: 2005-07-07 பிற்பகல் 2.30 மணியாகும்.
8. பொறிவைக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ முடிவு நேரத்திற்கு முன்பாக *"தலைவர், கேள்விச் சபை, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிறீன் வீதி, திருகோணமலை"* என்ற முகவரிக்குக் கிடைக்கப் பெறத்தக்கதாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. கேள்விகள் யாவும் மேற்கூறிய முகவரியில் கேள்வி நேரம் முடிவுற்ற உடன் திறக்கப்படும்.
10. கேள்விகள் கோருவோரோ அல்லது அவர்களது அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்கமுடியும்.
11. மேலதிக விவரங்களுக்கும் விளக்கங்களுக்கும் மாகாணப் பணிப்பாளரை அல்லது பிரதம பொறியியலாளரை 026 - 222 2878, 026 - 222 1020 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.

**அ.கி.பத்மநாதன், செயலாளரும் தலைவரும்,**
**அமைச்சுக் கேள்விச்சபை (வ.கி.மா.),**
**மாகாண பொது நிர்வாக, வீதி அபிவிருத்தி உள்ளூராட்சி அமைச்சு,**
**திருகோணமலை.** (சி-43415)(26-11-15)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்:

1. பிரதான உணவகம், திருநெல்வேலி.
2. பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்.
3. இராமநாதன் நுண்கலைக்கழக பெண்கள் விடுதி உணவகம்.
4. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்.
5. மருத்துவ பீட உணவகம்.
6. ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்.

ஆகிய உணவகங்களை நடத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளரினால் 28.06.2005ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 1000/-ம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200/- ம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக் கிளையிற் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை நேரடியாகவோ, தபால்மூலமோ *பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* எனும் முகவரியில் சேர்ப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு விண்ணப்பப்படிவம் ஓர் உணவகத்திற்கு விண்ணப்பிப்பதற்கே உபயோகிக்கலாம். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்** (சி-43413)(21-11-15-26 14.06.2005

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 20 - 05 - 1968



மறைவு 17 - 05 - 2005

அமரர்

### கருணாமூர்த்தி காந்தரூபன் (பாபு)

கடந்த 17.05.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15.06.2005) புதன்கிழமை காலை இன்பருட்டி கடற்கரையில் அமைந்துள்ள மடத்தில் நடைபெறும். தொடர்ந்து வீட்டில் மதியபோசனம் இடம்பெறும். இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இன்பருட்டி,
பருத்தித்துறை. (C/43416)(21-11-15-26)

**மனைவி, பிள்ளைகள.**

மீண்டும் உற்பத்திகளை ஆரம்பித்துள்ளோம்



நொர்தேண் இண்டஸ்ரீஸ்

ரயர் றிரப்புநர்களும்

சைக்கிள் ரயர், ரியூப் உற்பத்தியாளர்களும்

69, பிறவுண் வீதி, கொக்குவில்



# சக்தி T.Vயில் திரைப்படம்

இல.169, 171, மின்சார நிலைய வீதியில் இங்கும் புனிதா நகைமாடம் வழங்கும் திரைப்படவிருந்து விஜய், இஷாகோபிகா நடித்த

**நெஞ்சினிலே**

வரும் வெள்ளி (17-06-2005) இரவு 9.45 மணிக்கு உங்கள் சக்தி T.Vயில் பாருங்கள்.

☞ 239, கஸ்தூரியார் வீதியில் இயங்கிய எமது ஸ்தாபனம் தற்போது கீழ் உள்ள முகவரியில் இயங்கிவருகின்றது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*169. 171, மின்சாரநிலைய வீதி (யாழ். பஸ் நிலையம் முன்பாக),*
*யாழ்ப்பாணம்.*

(36580) (24-38-45-14) T.P.: 021 222 7026



# பாண் விலை மாற்றம்

15.06.2005 இன்றில் இருந்து 450 கிராம் பாணின் ஆகக்கூடிய சில்லறை விற்பனைவிலை ரூபா 19 ஆகும் என்பதனை அங்கத்தவர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம். நிறை, தரம் விலை ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் எமக்கு அறியத் தரவும்.

**குறிப்பு:** பேக்கரி மா தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். (பிறிமா மில் பிறாண்ட்).

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-43420)(38-45-14)

நிர்வாகம், யா.மா.பே.உ.சங்கம்.



NRP Northern Rehabilitation Project

kfw gtz

# சாரதிகள் வெற்றிடம்.

ஜி.ரி.சற் - வட புனரமைப்புத்திட்டம் வாகன சாரதிகள் பதவிகளுக்கான விண்ணப்பங்களை பொருத்தமானவர்களிடமிருந்து எதிர்பார்கிறது.

- கல்வி - பொது சாதாரண தரம்
- வயது 30-50 வருடம்
- A வகுப்பு சாரதிகள் அனுமதிப்பத்திரம்
- 3 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம்.
- ஆங்கிலம் பேசும் திறன

உறவினர்கள் அல்லாத இரண்டு சிபார்சு செய்யக்கூடியவர்களின் பெயர் விபரங்களுடனும், தொலைபேசி இலக்கமிருப்பின் அதனையும் குறிப்பிட்டு சுயவிவரங்களுடன் 23.6.2005 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

சிரேஷ்ட ஆலோசகர்,

**ஜி.ரி.சற் - வட புனரமைப்புத்திட்டம்,**
**472, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-43431)(38-45-14)


# 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்

அன்னை மடியில் 31 ~ 12 ~ 2003



ஆண்டவன் அடியில் 16 ~ 05 ~ 2005

## செல்வன் சிறிஸ்குமார் சாருஜன்

தத்தித் தத்தி நடந்து வந்த
தித்திக்கும் தமிழ்க் கனியே
எத்திக்கும் ஒளிவீசும் — உன்
முத்தான முகமெங்கே?
சொல்லாமல் சென்றாயே
சொல்லியழ வார்த்தையில்லை
எங்கு சென்றாய் எம் சாரு!
ஏங்குதய்யா எம் நெஞ்சு!
எந்நாளும் உனை மறவோம்
எம் நெஞ்சில் நீ வாழ்வாய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குரும்பியோலை, அல்வாய் மேற்கு. (36587)(38-45-14) குடும்பத்தினர்.

# 500 ரூபா போலி பணத்தாள் கண்டுபிடிப்பு

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையில் வாடிக்கையாளர் ஒருவர் வைப்புச்செய்வதற்கு கொண்டுவந்த பணத்தில் 500 ரூபா போலிதாள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது.

வைப்பில் இடுவதற்காக எடுத்துவந்த பணதலை வங்கி அலுவலர் பணம் எண்ணும் இயந்திரத்தில் செலுத்தி எண்ணியபோதே இந்தப் போலி 500 ரூபா நோட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக வங்கி நிர்வாகம் பொலீஸாரிடம் முறைபாடு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-28)

# மரண வீட்டின் மீது குண்டுவீச்சு வயோதிபர் பலி; 13 பேர் காயம்!

புலிகளின் ஆதரவாளர் ஒருவரின் மரண வடொனறின் மது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். 13 பேர் காயமுற்றனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை பொலன்னறுவை சொருவில் திம்புலாகல வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சண்முகம் செல்வராஜா (வயது - 23) என்பவரின் சடலம் வைக்கப்பட்டிருந்த வீட்டின்மீதே இந்தக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர் புஞ்சிராஜா (வயது - 80) என்பவராவார். காயமுற்றவர்கள் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மரண வீட்டின் முற்றத்திலேயே கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. கருணா குழுவினரே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என தெரியவருகிறது. அரலகல்வில பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்தில் புதுவிதி

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் மே மாதம்வரை கடமையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கிறது. கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் இது தொடர்பான பணிப்புரைக் கடிதத்தை வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

01.06.2005 ஆம் திகதிக்கு முன் தொடர்ச்சியாக 180 நாட்கள் கடமையாற்றிய சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்பட நடவடிக்கை எடுக்குமாறு அந்தக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

முன்னர் 01-10-2001 ஆம் திகதிக்கு முன் கடமையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


நாதன்ஸ் சினிமா — ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

"இன்டி பெண்டன்ஸ் டே" டைரக்டர் ரோலண்ட் எம்ரீச் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்!

THE DAY AFTER TOMORROW (ரீலஸ்) நாளை மறுநாள் (தமிழாக்கம்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

சுனாமி போன்ற அழிவுகளைச் சித்திரிக்கும்.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சரத்குமார், அறிமுகம் ரமேஸ் பூஜா நடித்த

ஜித்தன் (ரீலஸ்)

காட்சிகள்: 11.00. 3.00 (பு.நே.)

(C/41380)(20-16-17)



ராஜா யாழ்ப்பாணம்

சரத்குமார், நெப்போலியன், தேவயானி, விவேக் நடித்த

தென்காசிப்பட்டணம்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.) (ரீலஸ்)

17 முதல் கந்த கசடற

(C/41381)(12-17)


# மரண அறிவித்தல்

## இளையதம்பி பொன்னம்பலம்

(பிரசித்த நொத்தாரிசும் எழுதுவினைஞரும் மொழிபெயர்ப்பாளரும்)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பொன்னம்பலம் (கிளாக்கர் பொன்னம்பலம்) நேற்று (14.06.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு.*

தகவல்: குடும்பத்தினர். (சி-43432)(38-45-14)

# மரண அறிவித்தல்கள்

## முத்துத்தம்பி இராமநாதன்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)



சுதுமலையில் பிறந்தவரும் தற்போது கனடாவில் வாழ்ந்தவருமான முத்துத்தம்பி இராமநாதன் சென்ற 11 ஆம் திகதி சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்பிகையின் கணவரும் முருககுமார் (கனடா), திரௌபதி (மாலைதீவு), ஜெயசாந்தினி (கனடா) ஆகியோரின் மாமனாரும் பைரவியின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன (இணுவில்), அருணாச்சலம் (சுதுமலை), பூமாலட்சுமி (நல்லூர்), பேராயிரவர் (சுதுமலை) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 ஆம் திகதி சனிக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

*R.Murugakumar*
*1864, Penshurst Road,*
*Victoria BC, V8 N2, P3,*
*Vancouver, Canada.*
*001-250-477-4613*

(சி-43423)(38-45-14)

தகவல்:
திரௌபதி பாரதி
19, 3/5 மிலாகிரிய அவன்யு
கொழும்பு - 04.
தொலைபேசி: 2595860

## திருமதி இராஜரட்ணம் நாகம்மா



சீரணி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த இராஜரட்ணம் நாகம்மா 13 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொலீஸ் உத்தியோகத்தர் கந்தையா இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மங்களேஸ்வரி (சண்டிலிப்பாய்), ஜெயமங்களம் (நோர்வே), சந்திரலீலா (சண்டிலிப்பாய்), மகேஸ்வரி (கொழும்பு), தேவமலர் (டென்மார்க்), காலஞ்சென்ற இரட்ணபாலன், நாகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற இராஜேஸ்வரி காலஞ்சென்ற விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினவடிவேல் (சண்டிலிப்பாய்), மனோக[illegible] (நோர்வே), சிற்றம்பலம் (சண்டிலிப்பாய்), சண்முகநாதன் (கொழும்பு), இரவீந்திரன் (டென்மார்க்), செல்வரத்தினம் (குவயிட்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கலைவாணி (சண்டிலிப்பாய்), மோகன் (நோர்வே), சிறீசங்கர் (இத்தாலி), சிவச்சந்திரன் (குவயிட்), கிறிஸ்டி (டென்மார்க்), கிறிஷாந்தி (டென்மார்க்), நஷானா, காங்கேயன் (லண்டன்), திலீபன் ஜெயா (டென்மார்க்), ராஜினி சதீஷ் (இத்தாலி), பகிரதி, மயூரன் (கனடா), இராஜபாலன் (இத்தாலி), சோபனா (கொழும்பு), நர்மினி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாறுகன் (லண்டன்), யோசுவா (டென்மார்க்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.06.2005) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக இல. 271/2 தேவாலய ஒழுங்கை, மோதர வீதி, கொழும்பு - 15 இல் இருந்து மாதம்பிட்டி பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*271/2,தேவாலய ஒழுங்கை, மோதரவீதி, கொழும்பு - 15*
*T.P: 2527885*

(சி-43424)(38-45-14)

தகவல்: பிள்ளைகளான ஜயமங்களம், சந்திரலீலா, மகேஸ்வரி, தேவமலர், நாகேஸ்வரி.

## திருமதி வைத்திலிங்கம் பாக்கியலட்சுமி (ராதா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் பாக்கியலட்சுமி 13.06.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற உப அதிபர், யாழ். வைத்தீஸ்வரக்கல்லூரி) அவர்களது அன்பு மனைவியும் சிவபாக்கியம், அருள்நந்தி (பேராசிரியர், விவசாய பீடம், கிழக்கு பல்கலைக்கழகம்), சிவானந்தன் (தொலைத்தொடர்புப் பரிசோதகர் S.L.T. கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவன்தாசன் (ஓய்வுபெற்ற கணக்காளர், தபால் திணைக்களம்), தவமணிதேவி (பிரதம நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம்), சித்ரா (ஆசிரியை, கொழும்பு சென்.ஆன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்ற அன்னம்மா கந்தையா, தங்கரத்தினம் இராசையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகானந் (உயர்தர மாணவன், யா.இ.க.), சாம்பவி (வின் சென்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், Dr.அமரசிங்கம், சற்குணராணி சோதிநாதன் (U.K), சத்தியசீலன், சரஸ்வதி, குணலக்ஷ்மி, காலஞ்சென்ற தயாநிதி, கருணாநிதி, யதார்த்தநாதன் (U.S.A), அருளாளன் (கனடா), யோகலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2005) புதன்கிழமை காலை 10மணியளவில் (பழைய நேரம்) கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*84, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(36579)(38-14-45)

தகவல்:
செ.சிவன்தாசன் (மருமகன்),
Prof. வை.அருள்நந்தி (மகன்),
வை.சிவானந்தன் (மகன்).

## கிருஸ்ணர் சின்னத்தம்பி (மணியம்)

புதுத்தோட்டம்தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் பருத்திக் கலட்டி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி (மணியம்) நேற்று (14.06.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணர் - அன்னமுத்துவின் அன்பு மகனும் பொன்னம்மாவின்அன்புக் கணவரும்,சிவகுமார் (புள்ளி - ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்), திருமதி ஜெயந்தி சிவராசா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமாரி,சிவராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,மதன்குமார், கீர்த்தனா, வேனுகா, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தம்பு, சின்னத்துரை, சின்னையா மற்றும் தங்கம்மா, இராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.06.2005) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம்.* (36587)(38-45-14)

தகவல்:
சிவகுமார்
(புள்ளி - மகன்).

# ராஜாவாக மாறினாலும் நாய் செருப்பைக் கடிப்பதை நிறுத்தாது

## ஜே.வி.பியைக் கிண்டலடிக்கிறார் பந்துல எம்.பி.

கொழும்பு, ஜூன்15

ராஜாவாக மாறினாலும் நாய் செருப்பைக் கடிப்பதை நிறுத்தாது. அதுதான் இன்று ஜே.வி.பியினரின் நிலையும் என்று உவமானத்துடன் கிண்டலடிக்கிறார் பந்துல குணவர்த்தன எம்.பி.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை தோற்கடிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில ஜனாதிபதியுடன் ஒட்டிக்கொண்ட ஜே.வி.பியினர் இப்பொழுது அவருக்கே ஏழரைச் சனி ஆகிவிட்டனர் என்றும் பந்துல குணவர்த்தன மேலும் கூறினார்.

நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய அரசு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதாலேயே நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடிந்தது என்று நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். அதேவேளை, இந்த வருடத்தைப் போன்று சகல துறைகளிலும் நாடு ஒரு பின்னடைவை வரலாற்றில் எப்போதுமே சந்தித்தது இல்லை. அவற்றுக்கெல்லாம் முழுக் காரணம் ஜே.வி.பியினர்தான் என்று குற்றம் சுமத்துகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஜே.வி.பி.யினரோ, ஜனாதிபதியின் மீதும் அமைச்சர்கள் மீதும் குற்றம் சுமத்திவிட்டு இப்போது கழன்றுகொள்ளப் பார்க்கின்றனர். "நாட்டைப் புலிகளிடம் இருந்து காப்பாற்றுகின்றோம். உலக வங்கியுடனான தொடர்பைத் துணடிப்போம், வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம்" - என்று வாக்குறுதிகளை அளித்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

இந்த அரசு ஆட்சிக்குவந்து ஒருவருடமும் மூன்று மாதங்களும் கடந்துவிட்டன. ஆனால், எதையும் செய்யவில்லை. இப்படியான வேளையில் அரசிலிருந்து விலகப்போகிறோம் என்று ஜே.வி.பி.காலக்கெடு விதித்திருப்பது கேலிக்கூத்தானது. ஜே.வி.பி. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். அதுவரை அரசிலிருந்து கொண்டே அதனைச் செய்விக்கவேண்டும். அரசின் மீது பழியைபோட்டுவிட்டு ஓடக்கூடாது.

ஜே.வி.பியினர் இப்போது அரசிலிருந்து வெட்டிக்கொண்டு வாக்குவேட்டைக்குத் தயாராகிவிட்டனர். இவர்களுக்கு போஸ்டர் ஒட்டவும், ஆர்ப்பாட்டம் நடத்தவும் மட்டும்தானே தெரியும. அரசு நடத்தத் தெரியாது என்பதை இப்போது ஊர்ஜிதப்படுத்திவிட்டனர் என்றும் பந்துல குணவர்த்தன எம்.பி. மேலும் கூறினார். (ஐ-க)

### பிரதமர் தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை அறிவித்து அவர் தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அப்போது நாமும் கௌரவமாக ஆட்சியில் இருப்போம். ஜனாதிபதி சரியான அறிவிப்பொன்றை விடுத்தால் மட்டுமே அவர் கௌரவமான முறையில் தமது பதவியிலிருந்து விலகிச் செல்லமுடியும்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் ஜனாதிபதியின் முயற்சிகளை அவருடன் இருக்கும் சில பிரதியமைச்சர்கள் மட்டுமே ஆதரிக்கின்றனர். எனவே, தேசத்தின்மீது பற்றுள்ளவர்கள் பிரதமர் தலைமையில் அணிதிரள முன்வர வேண்டுமென நாம் அறைகூவல் விடுக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆட்சியொன்றை எவர் அமைத்துப் பொதுக்கட்டமைப்பொன்றைச் செய்ய முனைந்தாலும் நாம் அதனைத் தடுத்தே தீருவோம். அதற்கு எதிராக மக்களை வீதியில் இறக்குவோம்.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (ஐ-க)

### பேரினவாதிகளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டங்களில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கும்படி வணிகர் மன்ற ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு என்பது ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த வடக்கு - கிழக்குக் கரையோர மக்களின் புனர்வாழ்வுக்கான வெளிநாட்டு உதவிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணைந்து முகாமை செய்வதற்கான நிர்வாக அலகு மட்டுமே என்றும்-

இந்தப் பொதுக்கட்டமைப்புக்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் எவ்விதத் தொடர்புமற்றபோதிலும்கூட சிங்களப் பேரினவாதிகள் இதற்காகப் பேயாட்டம் போடுகின்றனர் என்றும் -

ஆகவே, இந்தப் போராட்டத்தில் பங்கேற்று ஈழத்தமிழர்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்றும் -

தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம் விடுத்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-81-117)

### பிரிட்டிஷ் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் கரையோரப் பகுதிகளான அறுகம்குடா, நிந்தவூர், அம்பாறை, ஹிக்கடுவ மற்றும் காலி ஆகிய இடங்களுக்கு அவர் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவார்.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான விடயங்கள் பற்றி உயர்மட்ட சந்திப்புகளை அவர் கொழும்பில் நடத்துவார் என்று பிரிட்டிஷ் தூதரக அறிக்கை தெரிவித்தது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இந்தோனேஷியாவுக்குச் சென்றுள்ள அமைச்சர் தோமஸ் அங்கு நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் இன்று இலங்கைக்கு வருகின்றார். (க)

### அரசுத் தரப்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவது தற்போதுள்ள பிரச்சினைகளை எவ்விதத்திலும் தீர்க்க உதவப்போவதில்லையென்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் மேலும் பல சுற்றுப்பேச்சுக்களை நடத்தலாமென்பதால் அரசிலிருந்து விலகுவது தொடர்பான காலக்கெடுவை ஒத்திப்போடுமாறும் இந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-க)

### மீள்பரிசீலனைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. ஏற்கனவே, இந்த விடயம் தொடர்பில் நாம் போதியளவு கால அவகாசத்தை வழங்கியிருக்கிறோம். எனவே, ஜனாதிபதி இப்போது ஒரு முடிவை இன்றிரவுக்குள் அறிவிக்கவேண்டும்.

இல்லையெனில், நாளை காலை முதல் நாம் முற்றுமுழுதாக அரசிலிருந்து விலகிவிடுவோம். எதிர்க் கட்சியிலிருந்து கொண்டு நாம் சுயாதீனமாகச் செயற்படுவோம். இது தான் எமது முடிவு. நாம் இந்தமுடிவில் மாற்றஞ் செய்யப் போவதில்லை.

- இவ்வாறு அமைச்சர் விஜித ஹேரத் மேலும் கூறினார். (க)

UNIT
எமது வாடிக்கையாளர்களது
வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது
மீண்டும் UNITன்
UNIQUE Offer
எல்லா கணனி உதிரிகளும் குறைக்கப்பட்ட விலையில்
நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்
TV Tuner/Webcam/Woofer/UPS/Table
Printer/Scanner & CD Cleaner, Screen Filter,
Dust Cover, Mouse Pad Totally Free
3 வருட முழு உத்தரவாதம்
UNIT 347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021 - 4590720 / 0773134737
(C-43393)

வ/கி மாகாண பொதுச் சேவை
சாரதி வகுப்பு II "ஆ"
போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்
பொது உளசார்பு,
பொது அறிவு
By:T.திருமுருகன்
வியா, வெள், சனி
9-12, 4-6 p.m
ஆரம்பம்: 16-06-2005
9.00 a.m (36504)
D.C.S நியூட்டன்

### கொள்ளைக் கும்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்டது.

கும்பலைச் சேர்ந்த 8பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் பெண்களாவர். அவர்கள் வசம் இருந்த மூன்று துப்பாக்கிகளையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சமயம் அவர்களிடம் பெருந்தொகைப் பணமும் சுமார் 10 லட்சம் ரூபா வரையான பெறுமதியுள்ள நகைகளும் இருந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-க)

### விசுவமடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறி குளத்திற்குள் தடம்புரண்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் லொறி 'கிளீனர்' ஆ. பெருமாள் (வயது52) படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். காயமடைந்த இருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-402)

### அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான - பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான - பொதுக்கட்டமைப்பு உடனடியாக உருவாக்கப்படவேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம். இந்த நிர்வாகக் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் இலங்கை அரசிற்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் பாராட்டைத் தெரிவிப்பதுடன், இது விடயத்தில் ஜனாதிபதி காட்டும் ஆர்வத்திற்கும் முழுமையான ஒத்துழைப்பையும் இணைத தலைமைகள் வழங்கவுள்ளன. இவ்வாறான கட்டமைப்பு ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப பணிகளை சீராக - சமமாக - கொண்டுசெல்ல உதவுவதுடன், இது இருதரப்பு நம்பிக்கையையும் கட்டியெழுப்பவும் பெரிதும் பங்களிப்பை வழங்குமென நாம் நம்புகிறோம்.

இலங்கையில் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் பரஸ்பரம் கொலைகளும், வன்முறைகளும் இடம்பெறுகின்றன. இருதரப்பினரும் தத்தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு கொலைகள் மற்றும் வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### பாண் விலை 19 ரூபா

யாழ்ப்பாணம், ஜூன்15

450 கிராம் பாணின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை 19 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

இன்றுமுதல் இந்த விலை நடைமுறைக்கு வருகிறது என்று யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்திருக்கின்றது.

### முத்தலிப் கொலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் அறிக்கையின் அடிப்படையில் நீதிவான் தீர்ப்பளித்தார்.

நேற்றைய மரண விசாரணையின் போது, முத்தலிப்பின் வாகனச் சாரதியான எச்.எம்.சமரநாயக்க சாட்சியமளித்தார்.

முத்தலிப்பின் கொலை தொடர்பான இரகசியப் பொலீஸாரின் விசாரணை அறிக்கையை அடுத்தமாதம் 14 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

### ஜே.வி.பிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான சூழ்நிலையில் ஜே.வி.பியின் உயர்மட்டத் தலைவர்களின் இந்த முடிவு கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பொறுப்புவாய்ந்த அரசியல் கட்சி என்ற அடிப்படையிலும், அரசின் பிரதான பங்காளி என்ற அடிப்படையிலும் இருந்துகொண்டு இவ்வாறான உடனடி - அவசர - காலக்கெடுவை விதிப்பதை ஜீரணிக்க முடியாதிருப்பதாக ஜே.வி.பியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் பலர் தமக்கு நெருக்கமானவர்களிடம் அதிருப்தியையும், கவலையினையும் வெளியிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் முரண்பாடுகள் இருக்குமாயின் அவற்றைப் பேசித் தீர்த்துக்கொள்ள முன்னர் இவ்வாறான காலக்கெடுவை விதித்தமை குறித்தும், எடுத்த எடுப்பில் அரசிலிருந்து வெளியேறும் முடிவை எடுத்தது சம்பந்தமாகவும், அமைதி முயற்சிகளுக்கு எதிரான விதத்தில் ஜே.வி.பி. செயற்பட்டால், அடுத்த தேர்தலொன்றில் ஜே.வி.பி. எவ்வாறு மக்களை எதிர்கொள்வது என்பது பற்றியும் கவலைகொண்டுள்ள ஜே.வி.பியின் கீழ்மட்ட உறுப்பினர்கள், இதற்கெதிராகக் குரல் கொடுப்பது குறித்துத் தங்களுக்குள் சத்தம் சந்தடியின்றி ஆராய்ந்து வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

ஜே.வி.பியின் இவ்வாறான காலக்கெடு, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரவே வழிவகுக்குமென்று கூறும் ஜே.வி.பியின் கீழ்மட்ட உறுப்பினர்கள், இந்த அதிருப்தியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடமும் பகிர்ந்துகொண்டுள்ளார்களெனக் கூறப்பட்டது.

ஜே.வி.பி. தலைமையின் அதிரடி முடிவினால் கட்சிக்குள் எழுந்துள்ள அதிருப்தியும், குழப்பமும் அடுத்துவரும் நாள்களில் மெல்ல மெல்லப் பகிரங்கமாகி வெளிச்சத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)

### கடற்படையினர் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தலைமன்னார் பியருக்கும், தலைமன்னார் கிராமத்திற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து தலைமன்னார் கிராமத்தில் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் செல்லையா விமலராஜன் (வயது 30) என்ற இளைஞனைக் கைதுசெய்தனர்.

அதேவேளை, இப்படியான ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இப்பகுதியில் எங்கும் இடம்பெறவில்லை என்றும் -

வீதிக் கண்காணிப்புப் பணிகளுக்குச் சென்ற கடற்படை வீரர்களின் துப்பாக்கிகளில் ஒன்றே தவறுதலாக வெடித்துச் சிப்பாய்க்குக் காயம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் - இப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

எனவே, இச்சம்பவம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளும், கைதுசெய்யப்பட்ட இளைஞரின் பெற்றோரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (க)

EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.